
சிவமயம்

# குமரகுருபரன்



த. 3123

மலர் 25 ] 1974–௵ குருபூஜை இதழ் 1-ம்வ (15–5–74) [இதழ் 5

தனிப்பிரதி 45 பைசா வருடச் சந்தா ரூ 5-00

# ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர். சென்னை-86

5. திரு. Dr. T B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இரண்டாம் ஆண்டு நினைவுநாள் திருமுறைவிழா .... | 241 |
| 2. | திருவியலூர் உய்யவந்த தேவநாயனர் அருளிய திருவுந்தியார்-உரைவிளக்கம் ... | 245 |
| 3. | அருள்மொழி அமுது ... | 248 |
| 4. | வழித்துணை ... | 254 |
| 5. | தணிகைமலைத்தேன் ... | 264 |
| 6. | ஓடிவருக! ... | 268 |
| 7. | அடைக்கலம் ... | 271 |
| 8. | வேடிக்கை மனிதர் ... | 272 |
| 9. | வழிபாடு செய்யும் வேடன் .... | 275 |
| 10. | பித்தன் ... | 278 |
| 11. | திருமகேந்திரப் பள்ளியில் சிவாச்சாரியார் படிக்காசு நிதி ரு 4,500 ... | 282 |
| 12. | மூன்றாம் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை | 49 to 51 |

T-UN-443

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

# ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

# அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

## இரண்டாம் ஆண்டு நினைவுநாள் — திருமுறை விழா



திருச்செந்தூர் 27—5—1974

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 20ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அருள் ஆட்சிக் காலம் 1944—1972

ஓதாதுணர்ந்த முனிபுங்கவரான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளிடத்தில் பேரார்வமும் சிறந்த பக்தியும் கொண்டு ஷை சுவாமிகளின் தொண்டின் சிறப்பைத் தெளிவாக உலகறியச் செய்வதற்கான பற்பல வகைகளும் வகுத்தருளி, அதற்கான தனித்தனி நிதிகளும் வழங்கி, நிரந்தரமான முறையில் இமயமுதல் கன்னி ஈருக உள்ள தலங்களிலெல்லாம் தருமங்கள் பல நடைபெற்று வருவதற்கான அறக்கட்டளைகள் நிறுவியும், 1¼ கோடி ரூபாய்க்கும் அதிகமான சாஸ்வத நிதிகள் வழங்கி மக்கள் உய்யும் பொருட்டு துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், கலைக்கோவில்கள் ஆகியவை நிறுவியும், பன்னிருதிருமுறை வளர்ச்சி, அன்னம்பாலிப்பு, கடவுள் பக்தி, நல்லொழுக்கம் முதலிய பற்பல தர்மங்கள் மேலோங்கி வளர ஊக்கமும், ஆக்கமும் அளித்து அயராத ஆர்வத்துடன் ''ஈத்துவக்கும் இன்பமே'' தம் குறிக்கோளாகக் கொண்டு தர்ம சிந்தனையிலேயே இருந்து எண்ணி எண்ணிப் பல திறப்பட்ட தர்மங்களும், ஆலயங்களுக்குரிய நிவந்தங்களும், ஆலயங்களில் திருமுறை விண்ணப்பம் நடைபெறுவதற்கான நிரந்தர அறக்கட்டளைகளும், போட்டிப் பரிசுகளும், காசி, இராமேசுவரம், மதுரை முதலான ஸ்தல யாத்திரைக்கான உதவிகளும் நிறுவி, எண்ணிறந்த அறக்கட்டளைகளை ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கருணை பாலித்தருளியுள்ளார்கள்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ காசியில் பரிதாபி ஆண்டு வைகாசி வளர்பிறை சஷ்டி நாளில் (18–5–72) சைவசித்தாந்த பரமுத்தி அடைந்து, கங்கையில் ஜல சமாதிப் புண்ணிய பேறும் திருவருள் பாலிக்கப்பெற்றதை நினைவு கூர்ந்து உய்யும் பொருட்டு ஒவ்வொரு வருஷம் வைகாசி மாதம் வளர்பிறை சஷ்டி நாளில் குருபூசை விழாவும் திருமுறை விழாவும் நடைபெறத்தர்மசாசனம் நிறுவி ஆதிகுமரகுருபர சுவாமிகள் அவதாரத் தலமாகிய ஸ்ரீவைகுண்டத்தில் முதல் ஆண்டிலும், செந்திலாண்டவன் திருவருள் பாலித்த திருச்செந்தூரில் இரண்டாவது ஆண்டிலும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தோன்றியருளிய திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா அரியநாயகிபுரத்தில் மூன்ருவது ஆண்டிலுமாக மூன்று ஆண்டிற்கொருதரம் முறையாக மேலே கண்ட ஸ்தலங்களில் நடைபெறும் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21-வது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அங்கீகாரமும் அனுமதியும் ஆதரவும் பெற்று, ரூ. 10,000/– மூலதனம் நிலைவைப்புத் தொகையாக ஸ்டேட் பாங்கில் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்தால் ''திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 20 ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நினைவு நாள் அன்னம்பாலிப்பு திருமுறை விழா நிதி' முதலீடு செய்யப்பெற்று உள்ளது முதலாண்டு நினைவுநாள் பிரமாதீச ஆண்டு வைகாசித் திங்கள் 6-6-73ல் ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெற்றது. இரண்டாம் ஆண்டு நினைவு நாள் திருச்செந்தூரில் 27-5-74ல் நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பேராதரவிலும், ஆணைப்படிக்கும், அருளிப்பாடாகும் வண்ணமும், ஷை மூலதனத்தின் வருஷ வட்டி வருமானத்திற்கேற்பவும் ஷை விழாவிற்கான செலவு செய்யப்பெறும்.

குறிப்பு: திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21வது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களின் நினைவு நாளில் நடைபெறக் கீழ்க்கண்ட தருமங்கள் நிறுவியுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீகாசியில் பண்டாரா நிதி | ரூ. 7,000 |
| 2. | திருச்செந்தூர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தில் அன்னம்பாலிப்பு நிதி | ரூ. 2,000 |
| 3. | ஸ்ரீ காசியில் பண்டாரா உதவி நிதி | ரூ. 5,000 |
| 4. | மதுரையிலும், காஞ்சியிலும் அன்னம் பாலிப்பு நிதி | ரூ. 5,000 |

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

திருச்சிற்றம்பலம்

உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

# திருச்செந்தூர் ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
இரண்டாம் ஆண்டு நினைவு நாள் சிறப்பு வழிபாடு
ஆனந்த ஆண்டு வைகாசித்திங்கள் 13ம் நாள் (27-5-74)

## நிகழ்ச்சி விபரம்

காலை:- 10 மணி முதல் அபிஷேக அலங்கார நைவேத்தியத்துடன் சிறப்பு வழிபாடு

நண்பகல்:- 12 மணிக்கு மகேசுவரபூசை

இரவு 8 மணிக்கு:- திருமுறை விழா

திருமுறைவாணர்கள்:

1. சங்கீதபூஷணம் தருமபுரம் பி. சாமிநாத முதலியார், சென்னை.
2. தேவார இசைமணி எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர்,
   ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சிராப்பள்ளி.
3. திருச்சீரலைவாய் A. பொன்னுசுவாமி, பிடில்.
4. ,, P. ஐயாப்பிள்ளை, மிருதங்கம்.

குறிப்பு. திருமுறைவாணர்கள், சன்னதித்தெரு, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து இரவு 8 மணிக்குத் தொடங்கித் திருமுறை ஓதிக்கொண்டு நான்கு இரத வீதிகளிலும் வலமே வந்து ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்தில்திரும்பி வந்து பூர்த்தி செய்வர்.

நமரங்காள் வருக! வருக!

இங்ஙனம்,


கு. சுப்பிரமணியன்,
பரம்பரை தர்மகர்த்தா,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்.

திருச்செந்தூர்,
1—5—1974.

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 25 | ஆனந்த ஸூ குருபூஜை இதழ் 1௨ [15-5-74] | இதழ் 5

# திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்

அருளிய

## திருவுந்தியார் — உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

பாலகவி

திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடம்சிவம் உந்தீபற
தேடும் இடமதன் றுந்தீபற. 13

ஆன்ம போதத்தினால் ஆறு ஆதாரங்களிலும் போக்கு வரவு புரிவது நீங்கி, எல்லா இடங்களிலும் ஒழிவற நிறைந்து சலிப்பற நிற்கின்ற பதிஞானம் ஆன்மாவின் கண்ணதாகக் கூட, அப்பதிஞானக் கூட்டினால் ஆன்மஞானம் பதிஞான மேயாக; அந்தப் பதிஞானத்தாற் கூடினேமென்கின்ற உணர்

வும் அந்த ஞானமும் ஒருங்கே கரைந்த இடமே சிவரூபமாகும். இந்த இடம் போதம் கரைந்த இடத்தில் பிரகாசிப்பதன்றி ஆன்ம போதத்தால் அறியத்தக்க இடமன்று.

உயிரறிவு உலகியலில் சென்று அங்கு மிங்குமாக ஓடி உழல்வதில் நீங்கி இறைவனிடமாகப் புகுவது எளிமையானதல்ல. இருவினையில் போக்கு வரவு புரிவது தவிருதற்குச் சிவபுண்ணிய வினையில் போக்குவரவு புரியும் வண்ணம் உயிரறிவைச் செலுத்துதல் வேண்டும். அங்ஙனம் செலுத்துங்கால் முதற்கண் அவ்வறிவு, ஆதாரங்களைப் பற்றி நின்று அவற்றின் அதிதெய்வங்களைக் கூடி நிற்கும். அவ்வாறு கூடுகின்ற கூட்டினால் முடிபான பயனாகிய சிவசொரூபம் பேறு சித்திக்காது. ஏனெனில் ஆதார ஸ்தானங்களுக்கு அதிதெய்வங்களாயிருக்கும் மூர்த்திகள், சிவசம்பந்தமான வெவ்வேறு வடிவங்களையுடையனவாயும் சொரூப சிவமாகிய பரம்பொருளின் அதிட்டானக் கடவுளராயும் இருப்பதனாலேயேயாம். மேலும் மூலாதாரத்தில் விநாயகமூர்த்தியிடமும், அதனைத் தொடர்ந்து முறையே மற்ற ஆதாரங்களில் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம் ஆகிய மூர்த்திகளிடமும் உயிரறிவு ஓடிக்கொண்டிருக்கும். அவ்வோட்டம் தவிர்ந்து, உலகுயிர்களில் நீக்கமற நிறைந்துநின்று எப்போதும் உயிர்க்குயிராக இருந்து சிவத்தினது அறிவே, ஆன்ம அறிவாகும்பேறு பெற்றால் தேடப்படும் பொருளாகச் சிவம் இருக்கமாட்டாது! அந்தப் பேற்றைப் பெறாதவர் தேடி அடையும் இடம் அதுவன்று. இதனையே 'சென்றடையாத திருவுடையானை'' என்று ஆளுடையபிள்ளையார் அருளிச் செய்தார். ஆதார நிராதார யோகங்களுக்கு அப்பாற்பட்ட சிவயோகமே, சிவபோகத்தைக் கூட்டவல்லதாதலின் அச்சிவயோகிகளே மீதானத்தை உணர வல்ல மேன்மையுடையவர்கள்;

> கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
> உடந்தை யுடனேநின் றுந்தீபற
> உன்னையே கண்டதென் றுந்தீபற. 14

அநாதியே பற்றி நிற்கின்ற பேரிருளாகிய ஆணவமலத்தினால், அறிவிச்சை செயல்கள் சிறிதும் விளங்காது கட்டுப்

பட்டு அறியாமையில் மூழ்கி மயங்கிக் கிடந்த ஆன்மசிற்சத்தியை, ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி வந்த பரசிவம், திரோதான சத்தியைக் கொண்டு உணர்ச்சி உண்டாகும்வண்ணம் தட்டி எழுப்பி, மலபரிபாகம் வரச்செய்து, அத்திரோதான சத்தியே அருட்சத்தியாகி வெளிப்படத் தானும் அந்தச் சத்தியுடன் வேறறக் கலந்து நின்று உன்னையே தனக்கு இடமாகக் கொண்டு உன்னை விளங்க வைத்தது.

அநுபவம் உடைய ஞானதேசிகன் அறிவிக்கச் சிவயோகத்தை அறிந்து, அவனறிவித்த உபாயத்தில் அவதி கூடாமல் கூடினுல் ஜவம் பிரகாசிக்கும். உயிர் அருவாகவும் வியாபகமாகவும் சேதனமாகவும் நித்தியமாகவும் ஜீவத்தைப் போல இருப்பது என்ருலும் உயிரின் இத்துத் தன்மை ஜவத்தின் இத்துத்தன்மையைப் போல நுண்மையுடையதன்று. அதனுலேயே உயிருக்குச் சார்ந்ததன் வண்ணமாம் நன்மை உளதாயிற்று. அநாதியே மூலமலமாகிய ஆணவமலத்தில் அழுந்திக் கண்ணில்லாத செழுவீயைப்போல அறிவு முதலியன விளங்காமல் மயங்கிக்கிடந்த ஆன்மாவுக்குச் சிவபெருமான் தனது பெருங்கருணை பால் தநுகரணதிகளைக் கொடுத்து அவ்வறிவு முதலியவற்றைச் சிறிதளவு விளங்கும்படி அருள் புரிந்தார். மூலமலத்தில் அழுந்தி மயங்கிக் கிடந்த நிலையிலிருந்த ஆன்மாவை எழுப்பி மாயா தநுகரணங்களுடன் கூட்டி ஆன்ம அறிவோடு வேறறக் கலந்து உடனுகி நின்று உயிரையே தனக்கு இடபமாகக் கொண்டு உயிரைப் பிரகாசிக்கும்படி வைத்தது அருட்சத்தியுடன் பிரிப்பறக் கூடி நிற்கும் சிவமே என்பதை உணருதல் வேண்டும்; மலரில் மணம் அது உண்டான போதே இருப்பது என்ருலும் மலர், மலர்ந்த பின்னரே மணம் வெளிப்படுவது போல ஆன்மாவுக்கு மலபரிபாகம் உண்டாவதற்கு முன்னரே அவ்வான்மாவினிடத்துச் சிவசத்தி பதிந்திருந்தாலும் பரிபாகம் ஆன பின்னரே அது வெளிப்பட்டு விளங்கும். அங்ஙனம் சிவசத்தி வெளிப்பட்ட அவசரத்தில்தான் சிவமும் உயிரில் பிரகாசிக்க முற்படும்.

(தொடரும்)

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
*3119, கீழ இரண்டாம் வீதி.*
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

-O-

## 11. சிதம்பரம் வாழ் சான்றோர்

*திருச்சிற்றம்பலம்*

''தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்''

இறைவனைக் காட்டிலும் இறைவனது அடியார் பெருமையுடையவர், தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்பது ஔவை வாக்கு. எனவே முதல் முதல் தில்லைவாழ் அந்தணராகிய மூவாயிரர் பெருமைபாடுகிறார்.

ஒரு சமயம் தேவர்கள் கைலையாத்தில் நடைபெறும் ஒரு யாகத்திற்குத் தில்லைவாழ் அந்தணர்களாகிய மூவாயிரவரை அழைத்தனர், நடராஜாதரிசனம் செய்யாமல் நாங்கள் உண வருந்தமாட்டோம் எனத் அவர்கள் கூறினர் பிற்பகல் நடராஜர் தரிசனத்திற்கு வந்து விடலாம் எனத் தேவர்கள் கைலைக்கு அவர்களை அழைத்துச் செல்ல யாகம் நடைபெற்றது. பிற்பகல் உணவிற்கு முன் நடராஜப் பெருமானின் தரிசனம் கிட்டவில்லையே எனத்தில்லை வாழ் அந்தணர்கள் கவலையடைய, வேள்வித் தீயினின்று ஒரு அழகிய நடராஜர் திருவுருவம் தோன்றியது. தரிசனம் கிட்டிய மூவாயிர முனிவர் உண வருந்தினர். தீயில் தோன்றிய நடராஜர் திருவுருவத்தையும், கைலையிலிருந்து ஒரு சிவலிங்கத்தையும் சிதம்பரத்திற்குக் கொண்டு வந்தனர். தற்காலம் அந்த மூர்த்தங்களையே ரத்தின சபாபதி என்றும் சந்திரமௌளீஸ்வரர் எனவும் அழைக்கின்றனர். தில்லைத் திருக்கோயிலில் அவ்விருமூர்த்திகளும் பூசிக்கப் பெறுவதை இன்றும் பக்தர்கள் கண்டுகளிக்கின்றனர்.

கைலை திரும்பிய தில்லை மூவாயிரவர்கள் தங்களுள் ஒருவர் குறைந்தது கண்டு கவலையடைய நானும் உங்களில் ஒருவனன்றோ என நடராஜ மூர்த்தி கூறினர். அதைச் சிதம்பரம் கோயிற்புராணம் கூறுகிறது.

நாவிரவு மறையினராய் நாமிவரில் ஒருவரெனும்
தேவர்கள் தேவுஅன செல்வச் செல்வர்களாய்த் திகழ் வேள்வி
பாவு நெறிபல செய்யும் பான்மையராய் மேன்மையராம்
மூவுலகும் தொழும் மூவாயிர முனிவரடி போற்றி.

தமது டமருக ஒலியில் உலகைப் படைத்து அமைத்த கரத்தால் காத்து, அழல் வைத்த கரத்தால் அழித்து ஊன்றிய திருவடியால் நமது பாவ புண்ணியங்களை மறைத்து தூக்கிய திருவடியால் அருளும் ஐந்து காரியங்களைச் செய்வதையே இறைவனின் நடராஜ உருவத்தின் பொருள் என்பர் ஆன்றோர். சிதம்பர மும்மணிக்கோவை முதல்பாடலிலேயே எனை யாட் கொண்ட குமரகுருபரர் கூறுவார். கற்பனைக்கெட்டாத கடவுளான பெருமான் தனது பெரும் கருணையால் திருச்சிற்றம்பலத்துள் ஆடுகிறார். தில்லை மூவாயிரவரில் அவர் முதல்வர் என்பதனால் அவரைப் பற்றிய முதல் இரண்டு பாடல்கள் பாடுகிறார் சேக்கிழார் பெருமான்.

**ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி**
**சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்**
**பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்**
**போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!**

**கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி**
**அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்**
**சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று**
**பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.**

தில்லைமூவாயிர் இறைவனைத் தீண்டிப்பூசனை செய்யும் பேறு பெற்றவர்கள். நான்மறை ஆறங்கம் அறிந்த நல்லோர் நல்லொழுக்கமே உருவமானவர். இறைவனையே இம்மையில் அடைந்தவர் இனி அவர்கள் பெற வேண்டுவது ஒன்றுமே யில்லை. திருவாரூர்ப் பெருமானின் வாக்கினால் திருத்தொண்டத்தொகை சுந்தரருக்கு எடுத்துக்கொடுத்தபோது இவர்களது திருப்பெயரே முதன் முதலில் வந்தது என்றால்இதைக் காட்டிலும் என்ன பெருமையுள்ளது. தில்லைவாழ் அந்தணர்கள் திருவடி வணங்கி மேலே செல்லுவோம்,

''திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்''

தில்லைமூவாயிரவருக்குப்பின் இவரைப் பாடிய காரணம் திருநீலகண்ட நாயனாரும் தில்லையிலே வசித்த பேறு பெற்ற

வர். திருநீலகண்டயாழ்ப்பாணர் என்று மற்றொரு நாயனரிருப்பதால், தெளிவாகக் காட்டுதற்காக குயவனர் எனக்குறித்தார். தில்லைவாழந்தணர்களாகிய வேதியர்கள் வாழும் தில்லையில் வேட்கோவர் குலத்தில் பிறந்தவர் என்று பாடவந்த சேக்கிழார் பெருமான் வேதியர் தில்லை மூதூர் என அவரையே வேதியர் எனப்பாடிய மாதிரி தொனிக்கிறது. சாதியால் குயவர். தன்மையால் வேதியர் என்பது குறிப்பு திருநீலகண்டர் நடராஜ பத்தர், பொய்சொல்ல அறியாதவர். தருமவழிநடப்பவர். மெய்யடியார்களுக்குச் சேவை செய்வதில் பெருவிருப்புடையவர், இவரிடம் பொய்மையான அடியார் வரமுடியாது. ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் அடியார்தான் வருவார். உண்மையடியாருக்குத்தான் ஓடு வேண்டும். பொய்மையாளருக்கு ஓடு எதற்கு என்பது குறிப்பு எனவே தனது பிழைப்பிற்காக பல மண்பாண்டங்களைச் செய்து விற்று அடியாருக்கு ஓடளித்த காலத்து காம வயப்பட்டார். இளமை மீதூர என்ற சொல்லை இங்கு வைத்த சேக்கிழார் பெருமான் அதிகமான இளமையால் காமவயப்பட்டார் எனவும்,இளமை இவருக்கு மீண்டும் வரப்போகிறதற்கான சம்பவம் நிகழப் போகிறது என்பதையும் தொனிக்க வைத்தார். சிவபெருமான் தேவர்களை அழிக்கவந்த ஆலகால விஷத்தைத்தான் எடுத்து விழுங்கினர். இறைவனது திருவயிற்றில் உலகம் உள்ளது. உள்ளே சென்றால் உலகம் அழிந்து விடுமே என எண்ணிய அம்மை இறைவனது கழுத்திலே விடத்தை நிறுத்தக்கண்டம் கறுத்து இறைவன் திருநீலகண்டர் எனப்பெயர் பெற்றார் இறைவனது கண்டம் கறுத்து உலகம் காப்பாற்றப்படாவிட்டால், தேவர்கள் அழிந்து அவர்களது பிரிவு தாங்காத அவர்களது மனைவியர் அழுது மார்பிலடித்துக் கொண்டு அதன் காரணமாக அவர்களது மார்புகளும் கைகளும் சிவந்து போயிருக்கும்.

மாயிரு ஞாலத்து மன்னுயிர் கண்களிப்ப மன்றுளாடும்
நாயகன் கண்டம் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற்றம்மா
நாயகன் கண்டம் கருதேல் அந்நாட்டு அமரர்
சேயிழை மாதருக்குச் செங்கைகளும் கொங்கைகளும் சிவக்கும்போலும்.

என்பர் குமரகுருபர சுவாமிகள், சிவபெருமானது இந்தக் கருணையை எண்ணி எண்ணி உருகி திருநீலகண்டம் என்றே

கூறிக்கொண்டிருப்பார் திருநீலகண்டநாயனர். தன துகணவர் சிவபக்தராயிருந்தும் சிற்றின்பத்தில் ஈடுபட்டிருப்பது கண்டு மனமுடைந்த, அழகும் சீலமுமுடைய அவரது மனைவியார், நாயனருக்கு வேண்டிய பணிவிடைகளை யெல்லாம் செய்து உடலுறவில்லாது வாழ்ந்தார். தன் கணவர் பரத்தைப்பாற் சென்று வருவது அவருக்கு இழுக்கையுண்டாக்குமே எனக் கவன்ருர். ஒருநாள் அம்மையாரை நாயனர் தீண்ட வந்த போது கோபித்து "திருநீலகண்டத்தின் மீது ஆணையாக எம்மைத் தீண்ட வேண்டாம்" என்ருர். "எம்மை என நீ கூறியமையால் இனி எந்த மாதையும் தீண்டமாட்டேன்" எனக்கூறிய நாயனர் இச்செய்தியை அயலறியா வண்ணம் வாழ்ந்தார். நாயனருக்கு இளமை சாய்ந்து மூப்பு வந்தது! ஆனல் அவரது சிவபக்தி சாயவேயில்லை. சிவயோகியான நாயனர் எதிரில் இறைவன் ஒருதினம் சிவயோகி வேடத்தில் வந்து, ஒரு ஓட்டைத் தந்து "இதை நான் வேண்டும் போது தருக" என்ருர். "தனக்கு ஒப்பில்லாத ஓடு தன்னுடன் சேர்ந்த எதையுமே சுத்தமாக்கி விடுவது. பொன்னையும் மணியையும் போல் பாதுகாக்கப்பட வேண்டியது இதை வாங்குவாயாக" என்ருர். வேண்டும் போது ஓட்டைத் தருக எனக் கூறியவர், ஓட்டைத் தரும்போது வாங்குக என்ருரே தவிர, திரும்பக் கொடு எனக் கூறவில்லை. நாயனர் ஓட்டை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி இறைவனும் தனது அம்பலம் சேர்ந்தார்.

சிறிது நாட்கள் கழிந்தபின் அம்பலவாணர் ஓட்டை மறைத்து, மீண்டும் சிவயோகி வேடத்துடன் நாயனரிடம் ஓட்டைக் கேட்க, நாயனர் ஓட்டைக் காணுது திகைத்தார், "பெரியவரே! தாங்கள் தந்த ஓட்டைக் காணேம். அதைக் காட்டிலும் வேறு நல்ல ஓடு தருகிறேன். என் பிழையைப் பொறுத்தருளுக" என்ருர். "வேறு ஓடு தருகிறேன் தங்களுடையதைக் காட்டிலும் நல்லது" என்ருல் இறைவனது ஓட்டைக் காட்டிலும் சிறந்த ஓடு நாயனரிடம் ஏது என நாம் நினைக்கலாம். ஆனல் யோகியார் ஓட்டைத் தரும்போதே "தன்னை யொப்பரியது தலத்துத் தன்னுழைத் துன்னிய யாவையும் தூய்மை செய்வது" என்று கூறினர். இறைவனது ஓடு நாயனருடை ஓடுகளுக்குப் பக்கத்தில் வைக்கப் பட்ட

காலத்து, தெய்வீகமான ஓடு தன் பக்கத்திலுள்ள ஓடுகளைத் தூய்மையாக்கி விட்டது. எனவே இறைவனது ஓடு பழைய தாயிற்று. நாயனாரிடம் உள்ள ஓடுகள் பழைய மற்றதனில் நல்ல பாத்திரங்கள் ஆகிவிட்டன என்பது குறிப்பு மேலும் நாயனார் வீட்டிற்கு இருமுறைகள் வந்து சென்றதால் அங்கு யாவுமே தூய்மையாகி விட்டன எனக்கொள்ள வேண்டும். வந்தவரோ எனக்குப் பொன்னால் ஓடு கொடுத்தால் கூட ஏற்றுக் கொள்ள முடியாது. பழைய ஓடுதான் வேண்டும் என்று பிடிவாதம் செய்கிறார். இறைவன் "பொன்னோடு வேண்டாமென்றோ தவிர நாயனார் அவரது ஓட்டைக் காட்டிலும் நாயனார் வீட்டில் நல்ல ஓடுகள் உள்ளன" எனக் கூறியதை மறுக்கவில்லை. என்பது குறிப்பிடதக்கது நாயனார் இறைவனது ஓட்டைக் காணவில்லை என எவ்வளவோ கூறியும் வந்தவர் நம்பவில்லை. "உன் மகனைக் கைப்பிடித்துக் குளத்தில் மூழ்கித்தா" என்றார். ஏழு பிறப்பெடுத்தாலும் நல்ல மக்களைப் பெற்றவருக்கு தீமை தீண்டாது,

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். —திருக்-62

"அப்படிப்பட்ட மக்கள் இல்லை" என்றார் நாயனார். "மக்கள் இல்லை என்ற நாயனாரை மனைவியின் கையைப் பிடித்து நீரில் மூழ்கிச் சத்தியம் செய்யுமாறு கூறினார் இறைவன். "ஒரு காரணத்தினால் நான் அவளைத் தீண்ட முடியவில்லை நீங்கள் வாவியில் தானே மூழ்கிச் சத்தியம் செய்யச் சொல்லுகின்றீர்கள் நான் கடலிலேயே மூழ்கித் தருகின்றேன்" என்றார். நாயனார், "ஓட்டைத் தரமாட்டேன் என்கின்றாய். மனைவியைக் கைப்பிடித்துச் சத்தியமும் செய்ய மறுக்கின்றாய்! வா! தில்லை மூவாயிரவரிடம் நியாயம் கேட்போம்!" என்றழைத்துச் சென்று விவரங்களை மூவாயிரவரிடம் கூற, மூவாயிரவரும் "புனலில் மூழ்கித் தருவதுதான் நேர்மை" எனக்கூற, அப்போதும் நாயனார் தன் மனைவியைத் தீண்டாமை செப்ப இயலாது "பொருந்திய வகையால் மூழ்கித் தருகின்றேன்" என அழைத்துச் சென்று, தான் வயதான காலத்தில் ஊன்றி நடக்கும் கோலை மனைவி கையில் ஒருபுறம் பிடிக்கச் சொல்லித்தான் ஒரு புறம் பிடித்து மூழ்க எண்ணினார். வந்த யோகியர் அதை மறுத்தார்,

தண்டிருதலையும் பற்றிப்புகும் அவர்தம்மை நோக்கி
வெண்டிரு நீற்றுமுண்ட வேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீர் என்னக் கூடாமை பாரோர் கேட்க
பண்டுதம் செய்கை சொல்லி மூழ்கினார் பழுதிலாதார்.

மனைவியைத் தீண்ட முடியாமை உலகமறியக் கூறி மூழ்கிய நாயனார். மூப்பு நீங்கி, உலகம் விரும்பும் இளமை (நாயனார் இளமையை விரும்பவில்லை என்பது குறிப்பு) பெற்று நீரி னின்று எழுந்த போது சிவயோகியாரைக் காணவில்லை. நாயனார் தம்பதிகள் மட்டும் இறைவனை இடப வாகனத்தில் அம்மையுடன் கண்டனர். ''ஐம்புலன்களை வென்றவர்களே! நம்பால் என்றும் இவ்விளமை நீங்காது இருப்பீராக'' என அருளினார். தில்லையிலே திருக்கூத்தாடி அடியவர்கள் மனை தொறும் சென்று அருளும் பெருமான்.

மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர்தாமும்
வென்ற ஐம்புலனால் மிக்கீர்! விருப்புடன் இருக்க நம்மால்
என்றும் இவ்விளமை நீங்கா தென்றெழுந் தருளினாரே.

நாயனார் தம் மனைவியுடன் இறைவனது சிவலோகத்தில் இள மையுடன் வாழ்ந்து பேரின்பப் பெரு வாழ்வு பெற்றார். இறைவனருளால் இளமையடைந்த திருநீலகண்ட நாயனார் துணைவியாருடன் சிறிது காலம் வாழ்ந்து பின் இறைவனடி அடைந்தார் எனச் சிலர் கூறுவர் அதுதவறு. உடனே இறை வனுடன் சிவலோகத்தில் பெருவாழ்வடைந்தார் என்பது தான் சரியானது என்பது ஆன்றோர் கருத்து.

திருநீலகண்டநாயனார் துணை

– திருச்சிற்றம்பலம் –

# வழித்துணை

வித்துவான் திரு கோ. கோவிந்தசாமி அவர்கள்,
[தமிழாசிரியர்] திருமுக்கூடல் (அஞ்சல்)

முருகப்பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்ருகிய திருத்தணிகைமலை அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது மக்கள் எப்போதும் அங்கு குழுமி இறைவனை வழிபட்ட வண்ணமிருப்பர். எனினும் அன்று கிருத்திகை நாளானதால் மக்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது. காவடி ஏந்திய அன்பர்கள் மகிழ்ச்சியுடன் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் முருகன் திருக்கோயிலை நோக்கிச் சென்றவண்ணமிருந்தனர். தணிகைமலை அமர்ந்த பெருமானே, அருள் உருவானவனே, எளியோர்க்கிரங்கும் ஏந்தலே, உன்னைக்கண்டு மகிழ இந்த இருகண்கள் மட்டுமல்ல, ஓராயிரம் கண்கள் இருந்தாலும் போதாது, என்னே உன் அழகு, அழகின் திருஉருவே நீயே சிறந்த தெய்வம் கண்கண்ட தெய்வம் என முருகனடியார்கள் கூறிமகிழ்ந்தவாறு சென்றுகொண்டிருந்தனர். எண்ணிக்கையிலடங்காத மக்கள் கூட்டம் முருகா முருகா என்ற ஒலி எழுப்பியதால் தணிகைமலை மீண்டும் மீண்டும் முருகா முருகா என்று எதிரொலி செய்த வண்ணமிருந்தது.

மாந்தரனைவரும் முருகனை எண்ணி மகிழ்ச்சியுடன் அவ்விறைவனை வழிபட்டுக்கொண்டிருந்த அந்த நாளில் தணிகைமலைக்கு இரண்டுகல் தொலைவில் இருந்த நல்லூர் என்ற ஓர் ஊரில் ஒரு இல்லத்தில் தாய்ப்பசுவைக்காண இயலாது தவிக்கும் கன்றைப்போல, தணிகைமலைக்குச் சென்று முருகனைக் கண்டு மகிழமுடியவில்லையே என்று பரிதவித்துக் கொண்டிருந்தாள் ஒரு நங்கை. சிவகாமி என்ற பெயருடைய அவள் நற்குடியில் பிறந்தவள். நற்பண்பு மிக்க ஒருவனைக் கணவனுகப் பெறும் பேறு பெற்றவள். ஒவ்வொரு கிருத்திகை நன்னுளிலும் கணவனுடன் தவருமல் தணிகைமலை சென்று வள்ளி

மணாளனை வணங்கி வழிபட்டு வருபவள். தன் கணவனைப் போன்றே முருகனைத் தன்குலதெய்வமாக எண்ணி எப்போதும் அப்பெருமான் நினைவாகவே இருந்து வருபவள். சிவகாமிக்கு நெடுநாட்களாக ஒரு குறை இருந்து வந்தது. மக்கட் செல்வமில்லையே என்ற குறை...மணமாகி ஐந்தாண்டுகளாகியும் தன் குலம் விளங்க ஓர் குழந்தை பிறக்கவில்லையே... முருகா எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்க அருள் புரிவாய் குழந்தை பிறந்ததும் அக்குழந்தைக்கு உன் பெயரையே இடுகின்றோம். ஒவ்வொரு கிருத்திகை நாளிலும் தவறாது உன்னைக் காண வருகின்றோம், என்று முருகனிடம் வேண்டினாள் அவளின் வேண்டுதல் வீணாகவில்லை. மிகவிரைவில் அவள் ஓர் குழந்தைக்குத் தாயாகும் பேற்றைப்பெற்றாள், எழில்மிக்க ஆண் குழந்தை ஒன்றையும் ஈன்றெடுத்துக் குமரன் என்று பெயரிட்டு மகிழ்ந்தாள். அக்குழந்தையும் ஓர் ஆண்டுக் குழந்தையாக ஆகிவிட்டது குழந்தை குமரனுடன் திருத்தணிகை மலைக்குக் காலையில் புறப்பட்டுச் சென்று அந்நாள் முழுவதும் இறைவனை வழிபட்டு மறுநாள் ஊர்திரும்ப வேண்டும் எனத் திட்டமிட்டிருந்தாள் சிவகாமி அவள் கணவனும் அதற்கு இசைந்தான். எனினும் திடீரென்று வெளியூர் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதால், தான் எப்படியும் வந்து விடுவதாகக் கூறிவிட்டுச் சென்றான். சென்றவன் சென்றவன்தான். இரண்டு நாட்களாகியும் திரும்பிவரவில்லை. கிருத்திகை நாளன்றும் சிவகாமி அவனை எதிர்நோக்கவாறிருந்தாள். கணவன் இல்லாமல் எப்படி மலைக்குச் செல்வது என ஏங்கினாள். அவனை எதிர்பார்த்துக் காத்திருந்ததால் ஊர் மக்கள் அவளுக்காகக்காத்திராமல் விரைந்து தணிகை மலைக்குச் சென்று விட்டனர். இரண்டு கல் தொலைவிலுள்ள கோயிலுக்குச் செல்லத் தனக்கு வழித்துணையாக வருபவர் எவரும் இல்லையே என எண்ணினாள், தன் கணவன் எப்போது வருவானோ....தான் எப்போது கோயிலுக்குச் செல்ல இயலுமோ...முருகா....இதுவும் உன்னுடைய சோதனைதானோ எனக் கருதிப் பெருமூச்சு விட்டாள் சிவகாமி.

மாலை மணி ஐந்து. சிவகாமியால் கணவனை விட்டுத் தனியாகத் தணிகை மலைக்குச் செல்லவோ...செல்லாமலிருக்

கவோ முடியவில்லை கணவன் வர இயலாவிடினும் தான் மட்டுமாவது சென்று வரவேண்டும் எனத் துணிந்தாள், அதே சமயம் அம்மா என்று யாரோ அழைக்கும் குரல்கேட்டு வெளியே சென்றாள். அங்கே... அறிமுகமற்ற ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும் என்று அவனை நோக்கிக் கேட்டாள் சிவகாமி.

சிவகாமி என்ற பெயருடையவர் தாங்கள் தானே.

ஆமாம்.

உங்களைக் காணத்தான் வந்தேன். தங்கள் கணவருக்குத் தெரிந்தவன் நான். அவரிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.

என்ன செய்தி... அவர் ஏன் வரவில்லை

அவருடைய உறவினர் ஒருவர் காய்ச்சலால் துன்புற்றுப் படுத்த படுக்கையாக இருக்கிறார். அவரை அந்நிலையில் விட்டு விட்டு அவரால் வர முடியவில்லை, திருத்தணிகை மலைக்குப் போக முடியவில்லையே என்ற குறை அவருக்கும் இருக்கிறது அதனால் குழந்தை குமரனுடன் உங்களை உடனடியாகத் திருத்தணிகை மலைக்குச் செல்லும்படி கூறுமாறு என்னை அனுப்பினார்,

அவரின்றி நான் மட்டும் எப்படிச் செல்வது.

நீங்கள் தயங்குவீர்கள் என்றுதான் ஓர் கடிதத்தைத் தங்களிடம் தருமாறு என்னிடம் தந்தனுப்பியுள்ளார். அதைத் தாங்கள் பாதுகாப்பாக வைத்திருந்தால் தங்களுக்கு எத்தகைய துன்பமும் நேராது என்று கூறச்சொன்னார். இதோ .. கடிதம் எனக்கூறி ஓர் கடிதத்தை சிவகாமியிடம் அளித்தான்...எதிரே இருந்தவன்.

கடிதத்தைப் பெற்ற சிவகாமி அதில் என்ன எழுதியிருக்கிறதென்று படித்துப் பார்க்கவும் மனமின்றி முருகனைப்பற்றிய சிந்தனையில் மூழ்கியவாறு நின்றிருந்தாள்.

தன்னிடம் கடிதத்தை அளித்தவன் தான் சென்று வருவதாகக் கூறிவிட்டுச் சென்ற பின்புதான் தன்னுணர்வு பெற்

ருள். விரைவாகத் தன்னறைக்குச் சென்று புதிய உடைகளை அணிந்து கொண்டாள். குழந்தை குமரனுக்கும் புதிய சட்டையை அணிவித்தாள். தன் இல்லத்திலிருந்தே நகைகள் அனைத்தையும் அணிந்த அவள், கணவன் அனுப்பிய கடிதத்தையும் தன் கையில் எடுத்துக்கொண்டாள். இல்லக் கதவைப் பூட்டித் தாளிட்ட பின், மிக விரைவாகத் தணிகைமலை நோக்கி நடக்கத்தொடங்கினுள். முருகா...முருகா...என்ற சொற்களைத் தவிர வேறொன்றையும் அவளுடைய வாய் கூற மறுத்தது. அவள் செவிகளிலும் அந்த ஒலியே விழுந்தவண்ணமிருந்தது.

சிவகாமி திருத்தணிகை மலைக்குச் சென்று மக்கள் கூட்டத்தில் சேர்ந்த போது எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. இரண்டு கல்தொலைவு அவளுக்குப் பெருந்தொலைவாகத் தோன்றவில்லை. முருகா முருகா எனக் கூறியவாறு இறைவன் குடிகொண்டுள்ள கோயிலினுள் நுழைந்தாள். தன்னை மறந்து வழிபட்டாள். தன் மகனையும் வணங்கச்செய்தாள். முருகா என் கணவனுடன் வரவேண்டுமென எண்ணிக் காலங்கடத்தி விட்டேன் அவர்வர இயலாமையால் நான் வந்து சேர்ந்து விட்டேன். இங்கு வந்து சேர்ந்ததும் உன்னுடைய அருளேயாகும் எனக்கூறி மகிழ்ந்தாள்.

தணிகைமலைக் கோயிலைச் சுற்றிவந்து ஆறுமுகப்பெருமானை வணங்கிய சிவகாமி மீண்டும் தன் ஊர் திரும்ப முற்பட்டபோது, இரவு நெடுநேரமாகிவிட்டது. மக்கள் கூட்டமும் கலைந்து விட்டிருந்தது. தனக்குத் தெரிந்தவர் எவரும் இல்லாமையால் அங்குத்தங்கவும் விரும்பவில்லை. எப்படியும் தன்னுடைய ஊர் சென்று விடவேண்டும் எனக்கருதினுள். துணையின்றி எப்படிச் செல்வது என்ற தயக்கமும் ஏற்பட்டது அத்தகைய தயக்கத்துடன் அவள்தனிமையில் நின்றிருந்தபோது அவளருகே வந்த ஒருவன்... யாரம்மா நீங்கள்.... எங்கே போகவேண்டும் என்ருன்.

இரண்டுகல் தொலைவிலுள்ள நல்லூர் செல்ல வேண்டும் என்னுடன் துணையாக வர யாரும் இல்லையே என்றுதான் இங்கு நிற்கிறேன் என்ருள் சிவகாமி,

நல்லூருக்கா... நானும் அந்த ஊருக்கருகாமையில் வசிப்பவன்தான். என்னுடன் வந்தால் உங்களைப் பாதுகாப்பாக உங்கள் வீட்டில் விட்டுச்செல்வேன் வருகிறீர்களா.

ஓ... வருகிறேன் எனக்கூறியவாறு தன்னை அழைத்தவனுடன் புறப்பட்டாள் சிவகாமி

வழித்துணையாக வருவதற்கு ஒருவன் கிடைத்திருப்பினும் தனக்குச் சிறந்ததுணை முருகனே. என எண்ணித் தன் கணவன் தனக்கனுப்பிய கடிதத்தை மிகவும் பாதுகாப்பாக வைத்துக்கொண்டாள். தனக்கு முன்னே செல்பவனைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தாள் எப்புறம் நோக்கினும் கரிய இருளே நிறைந்திருந்தது முருகனைப் பற்றிய எண்ணத்தில் மூழ்கியவாறு அச்சமின்றிச் சென்று கொண்டிருந்த அவளை ஏய்..... ..நில் என்ற குரல் தன்னுணர்வு பெற்று நிற்கச் செய்தது.

தன்னை நிற்குமாறு கூறியது வேருயாருமல்ல தனக்கு வழித்துணையாக வந்தவனே என அறிந்த போது திடுக்கிட்டாள்.

நல்லவன் என்று நம்பிவந்தோமே இப்பாதகன் தன்னை என்ன செய்வானே எனப் பதறினுள். எதிரே நிற்பவன் கொடிய அரக்கனைப் போன்றே அவளுக்குத் தோன்றினன்.

ஐயா......நீங்களா என்னை நிற்குமாறு கூறினீர்கள்.

ஆமாம்.

ஏன் அவ்விதம் கூறினீர்கள்.

காரணம் கேட்காதே; ஒருகல் தொலைவுதான் வந்திருக்கிறாய். இன்னும் ஒருகல் தொலைவு சென்றால்தான் உன்னுடைய ஊரை நீ அடையமுடியும். நான் உன்னை அழைத்து வந்தது உன்னைப் பாதுகாப்பாக உன் வீட்டில் விட்டுவிட்டுச் செல்வதற்காக அல்ல. நீ அணிந்திருக்கும் நகைகளைக்கவர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே அழைத்து வந்தேன் உம் சீக்கிரம் நகைகளை என்னிடம் கொடு.

ஐயா நல்லவனென்று நம்பி உன்னுடன் வந்தேன். அது என் தவறுதான். அதற்குத் தண்டனையாக என் நகைகள்

முழுவதையும் உனக்குக் கொடுத்து விடுகிறேன். என்னையும் என் குழந்தையையும் விட்டுவிடு. நாங்கள் சென்று விடுகிறோம்.

முதலில் நகைகளை என்னிடம் கொடு.

கடுமையாகக் கூறினன் கொடியவன்.

சிவகாமி தன் நகைகள் அனைத்தையும் எடுத்து அவனிடம் அளித்தாள். அதனைப் பெற்ற கயவன் கீழே மேல்துண்டை விரித்து அதன் மீது நகைகளை வைத்துவிட்டு அவளருகே வந்தான்.

நகைகளைத்தான் கொடுத்து விட்டேனே, என்னைவிட்டு விடு என்றுள் சிவகாமி.

உன்னை விட்டுவிடுவதா இப்போது உன்னை விட்டு விட்டால் நான் உன்னுடைய நகைகளைக் கவர்ந்துகொண்டது வெளியே தெரிந்துவிடும். அதனால் நான் சிறைக்குச் செல்ல நேரிடும். உன்னை விட்டு விடுவேனென்று கனவு காணுதே.

என்னை என்ன செய்யப் போகிருய்.

குழிதோண்டிப் புதைக்கப் போகிறேன்; மடிவதற்குத் தயாராக இரு,

காதகன் சொற்களைக் கேட்டுப் பேசுவதற்கும் நா எழாமல் கலங்கிய உள்ளத்துடன் நின்றிருந்த சிவகாமி. தான் மடிவதற்காகவா இவனுடன் வந்தோம். முருகா இப்பாதகனிடமிருந்து நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும் எனக் கண்களில் நீர் பெருக முருகனை வேண்டினுள்.

சிவகாமியை அழைத்து வந்தவன் தான் தயாராக வைத்திருந்த மண்வெட்டியை எடுத்து ஓர் பெரிய புதைகுழியை வெட்டினன். இடையே அம்மங்கை ஓடிவிடாதவாறும் பார்த்துக் கொண்டான்:

முருகா நான் மடியநேரினும் கவலையில்லை, உன் அருளால் எனக்குக் கிடைத்தஇக்குழந்தையையாவது காப்பாற்று எனக்கூறியவாறு தன் குழந்தையை அன்புடன் அணைத்த

சிவகாமி, குமரா அந்த முருகன்தான் உன்னையும் என்னையும் காக்கவேண்டும். வேறு வழி இல்லை, நீ அழாமலிரு எனக்கூறி அவனைக் கீழே விட்டுவிட்டு நின்றாள்;

புதைகுழியை வெட்டி முடித்து விட்டேன். இந்தக் குழியில்படு, எனக்கடுமையாகக் கூறினான் அந்தக் கொடுமை மனம் படைத்தவன்.

சிவகாமி அவனை எதிர்த்துப் பேசத் துணிவின்றி அவன் சொன்னபடியே அக்குழியினுள் படுத்தாள்.

குழந்தை குமரனோ எதையும் உணர இயலாமல் ஓர்புறமாக அமர்ந்து இருளில் எதையோ நோக்கிய வண்ணமிருந்தான்.

சிவகாமியைப் புதைகுழிக்குள் படுக்குமாறு செய்த பாதகன் குழியின் மேலிருந்த மண்ணை குழிக்குள் தள்ளத் தொடங்கினான்,

மண்விழும் போதெல்லாம் ஒருபுறமாகத்தன் உடலைச் சாய்த்து மண்ணைத் தனக்குக் கீழே தள்ளிக் கொண்டிருந்தாள் சிவகாமி. கரிய இருள் எங்கும் சூழ்ந்திருந்ததால் மண் அவளை மூடியதா இல்லையா என்பதை கொடியவனால் உணர இயலவில்லை, மண் முழுதும் குழிக்குள் தள்ளி முடிந்து விட்டது. சிவகாமி படுத்த நிலையிலேயே புதைகுழியின் மேலிருந்தாள்.

மண் முழுவதையும் குழிக்குள் தள்ளியும் அவள் புதைபடாமல் தப்பிவிட்டாள் என்பதை உணர்ந்து, வெகுண்ட வஞ்சகன். என்னை ஏமாற்றி விட்டுத் தப்பிச்செல்லலாம் என்று கருதிவிடாதே. புதை குழியிலிருந்து தப்பிவிட்டாலும் நீ என்னிடமிருந்து தப்பமுடியாது இதோ, இப்போதே உன்னைக் கொல்கிறேன்பார் எனக்கூறி அருகே கிடந்த ஓர் கல்லைப் புரட்டித் தூக்க முயன்றான்.

கல்லைத் தூக்கித் தன்மீது வீழ்த்தித் தன்னைக் கொல்ல வஞ்சகன் முனைந்து விட்டதைக் கண்ட சிவகாமி. முருகா... புதைகுழியிலிருந்து தப்பிய எனக்கு இப்பாதகனிடமிருந்து

நன்முறையில் தப்பிக்கவும் வழிகாட்டு. முருகா... முருகா... என்றாள் அவள் கூக்குரலிட முயலினும் அது வெளியே வர வில்லை. அதனால் மனத்திற்குள்ளேயே கூறிக்கொண்டாள். அச்சத்துடன் செய்வதறியாது எழுந்து நின்றாள்.

கல்லைத்தூக்க முயன்றகயவனை ஏதோ ஒன்று கடித்தது.

என்னை எறும்பு கடித்துவிட்டது. இதற்கெல்லாம் நான் அஞ்சுவேனா, இந்நிமிடமே கல்லைத் தூக்குகிறேன். அந்தப் பெண்ணை ஒழித்து விடுகிறேன். எனக்கூறி மீண்டும் கல்லைத் தூக்கமுற்பட்டான்.

அடுத்த நிமிடம்..........

முதன்முறை தீண்டிய நாகப்பாம்பு மறுமுறையும் அவன் கன்னத்தில் ஓங்கி அறைவது போன்று அவன் மீது பாய்ந்து கடித்துவிட்டுப் படமெடுத்தவாறு நின்றது

ஐயோ......பாம்பு எனக்கூவியவன் ஆ என அலறிய வாறு கீழே விழுந்தான். எழுந்து நிற்கவும் அவனால் முடிய வில்லை நஞ்சு உடல் முழுதும் பரவியதால் சிலநிமிடங்களில் அவனுடைய உயிர் உடலை விட்டுப் பிரிந்து சென்றது.

முருகா...நம்பிக்கைத் துரோகம் செய்தவனுக்குக் கடு மையான தண்டனையை அளித்து விட்டாய். என்னைக் காத்த தெய்வமே திருத்தணிகை முருகா....முருகா எனவாய்விட்டுக் கூவினாள் சிவகாமி.

அதேசமயம்.........

கையில் விளக்குடனும், ஊன்றுகோல் ஒன்றுடனும் அவ்வழியே வந்து கொண்டிருந்த முதியவர் ஒருவர் சிவகாமி யருகே வந்து யாரம்மா நீ......இந்தநள்ளிருளில் இங்குஎன்ன செய்கிறாய் என்றார்.

அவரைநோக்கிய சிவகாமி, ஐயா......திருத்தணிகைமலை சென்று முருகனை வழிபட்ட நான், எனது ஊர் திரும்ப எண்ணினேன். வழித்துணையாக வந்த ஒருவனை நம்பி அவனு டன் வந்தேன். அவனோ நான் அணிந்திருந்த நகைகளைப் பறித்துக் கொண்டதோடு என்னைக் கொல்லத் துணிந்து, எனக்காகப் புதை குழியும் வெட்டினான், அதிலிருந்தும்

தப்பித்தேன். அதனுல் சினந்த அவன் அருகே இருந்த கல்லைத் தூக்கி என்னைக் கொன்றுவிட முயன்றுன். கல்லருகேஇருந்த நாகப்பாம்பு அவனைக் கடித்துவிட்டது. அவனும் இறந்து விட்டான் அதோ பாருங்கள் என்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினுள்.

முதியவர் விளக்குடன் சென்று இறந்து கிடந்தவனை நோக்கினுர். அவனருகே படமெடுத்த நிலையில் பாம்பு இருந் ததையும் கண்டார். விளக்கின் ஒளியைக் கண்டதும் பாம்பு மெதுவாக நகர்ந்து சென்று மறைந்தது.

சிவகாமியை அணுகிய முதியவர் அம்மா....அந்த முருகப் பெருமான்தான் உன்னைக் காப்பாற்றியிருக்கிறுர். குன்றுதோ ருடும் குமரனை நம்பியவர்க்கு எப்போதும் துன்பம்நேரிடாது எத்தகைய இடர்நேரினும், ஆதவனைக் கண்ட பனி போன்று விலகிவிடும். வழித்துணைக்கு மனிதனை நம்புதல் கூடாது. முருகன்தான் நமக்கு ஏற்றதுணை. எளியோரைக் காக்கும் அம்மாயோன் மருகனையன்றி சிறந்த துணைவேறில்லை. அம்மா அருகாமையில்தான் என்இல்லம் இருக்கிறது. என்னு டைய மனைவியும் அங்கு இருக்கிறுள். இரவு அங்கு தங்கி விட்டுக் காலையில் போகலாம் வாம்மா என்றுர்.

குழந்தைகுமரன் கூக்குரலிட்டு அழாமல் தன் இனிய குர லால் அம்மா அம்மா என்றுதன்னுடைய அன்னையை அழைத் தான். விரைந்தோடி அவனை எடுத்துக் கொண்ட சிவகாமி அவனருகே ஒரு துணியின் மீது கிடந்த தன் நகைகளையும் எடுத்துக் கொண்டாள்.

முதியவருடன் அவரில்லம் சென்று அவர் மனைவியின் அன்பான வரவேற்பில் இரவு அங்கேயே தங்கினுள்.

பொழுது புலருமுன்பே பாம்பு கடித்து இறந்து கிடந்த வனைப்பற்றியும், சிவகாமியைப் பற்றியும் அறிந்த மக்கள் சிவகாமியின் துணிவைப் பாராட்டியதோடு முருகனருளால் அவள் உயிர் தப்பியதைப் பற்றியும் பலர் பலவிதமாகக்கூறிக் கொண்டனர். நிகழ்ச்சி நடந்த இடத்திற்குச் சென்று மடிந்து கிடந்த தீயவனைக்கண்டு. இது இவனுக்குச் சரியானதண்டனை

எனக்கூறினர் சிலர் சிவகாமியை நேரில்கண்டு; திருத்தணிகை முருகன்தான் உன்னைக்காத்தவர் இனி உனக்கு ஒரு குறையும் வராது எனக்கூறிச் சென்றனர்.

தன் இல்லம் சென்ற சிவகாமி தன்னுடைய கணவன் வந்ததும் நடந்ததைக்கூறி முருகப் பெருமான் அருளால் தான் உயிர்தப்பிய தன்மையை எடுத்துரைத்தாள்.

அவளின் கூற்றைக் கேட்ட அவள் கணவன் அவளை அன்புடன் நோக்கி, முருகப் பெருமானே கதி என்றிருக்கும் நம்மைத் துன்பம் அணுகவே அணுகாது. என்றும் கந்தவேள் நம்போன்றோரைக் கைவிடமாட்டார். நான் ஒர் கடிதம் அனுப்பியிருந்தேனே அதைப் பாதுகாப்பாக வைத்திருக் கிறாயா என்றான்.

இதோ நீங்கள் அனுப்பிய கடிதம் என்று அதை எடுத்து அவனிடம் அளிக்க முற்பட்டாள் சிவகாமி.

உனக்குத்தான் படிக்கத் தெரியுமே அதில் என்ன எழுதி யிருக்கிறது என்று நீ இன்னும் படித்துப் பார்க்கவில்லையா.

இல்லை..........

இப்போது நீயேபடி.

சிவகாமி கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். முருகனைப் பற்றிய சிறந்த பாடல் ஒன்று அதிலிருந்தது. அதைத் தவிர வேறு எதுவும் கடிதத்தில் இல்லை ஆதலால் பாடலை மனதிற் குள் படித்துப்பார்த்தாள். பின்பு கணவனை நோக்கி முருகனே சிறந்த தெய்வம் என நாம் எண்ணுவது போன்றே இப் பாடலும் அமைந்துள்ளது என்றாள்.

வாய்விட்டுப்படி நானும் கேட்டு மகிழ்கிறேன் என்றான் அவள் கணவன்.

சிவகாமி பாடலைப்படித்தாள், முருகப்பெருமான் அவள் எதிரே தோன்றி புன்னகைபூத்து அருள்பாலிப்பதுபோன்றே அவளுக்குத் தோன்றியது.

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே"

# "தணிகைமலைத்தேன்"

டாக்டர் திரு, புலவர். எ: மாணிக்கம், B. S. H C. அவர்கள்,
ஓம் முருகா மருத்துவமனை,
விசூர்.

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
பாலும் தேனும் உடலுக்கு உறுதி
வேலும் மயிலும் உயிருக்கு உறுதி,

என்பர் ஆன்றோர், மேலும், தேன் இனிமையானது. மிக்க சுவையுடையது, பல நோய்களைத் தீர்க்கும் பண்புடையது' இத்தகைய அருந்தேனை, அருந்தேன் என்பாரும் உண்டோ? மேலும், எல்லாம் வல்ல பரம்பொருளைத் தேனுக்கு ஒப்பாகச் சொல்லுவர் சான்றோர். "தேசனே! தேனார் அமுதே! என்பார் மணிவாசகர். "தேன் என இனிக்கும் திருவருட்கடலே! என்பார் இராமலிங்கர். "தேனை வழி திறந்து ஏத்துவார்க்கு' என்பார் திருஞானசம்பந்தர். "யார்க்கும், தெரியாத தத்துவனை, தேனை பாலை" என்பார் திருநாவுக்கரசர்.

'செங்கண் மால் விடையாய் தெளிதேனே' என்பார் சுந்தரர். மேலும், சாதாரணத்தேனை உண்டால் மட்டுமேஇனிக்கும். ஆனால், இறைவனாகிய தேனைக்கண்டாலே இனிக்கும். அதுமட்டுமா? மனத்தால் நினைத்தாலே இனிக்கும். தேனாகிய இறைவன் திருப்பெயர்களைச் சொன்னாலே இனிக்கும். மேலும்,

சாதாரணத்தேனை உண்டால், வாய்மட்டுமே இனிக்கும் ஆனால், இறைவனாகிய தேனை உண்டால் வாய்மட்டுமா இனிக்கும்? நம் மனமெலாம் இனிக்கும். மதியெலாம் இனிக்கும். மன்னிய மெய் அறிவெலாம் இனிக்கும். என்கின்றார் இருட்ஜோதி நீக்க வந்த அருட்ஜோதி வள்ளலார்.

இவ்வளவு கூறியும் அவர் இறுதியாக என்ன கூறுகின்றார் தெரியுமா? அப்பப்பா....! அதன் [இனிமையை எங்ஙனம்

எடுத்துரைப்பேன் என்கின்றார். இதோ அவர் தம் தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாடல். ம்...! பாடுவோமோ?

''காயெலாம் கனியெனக் கனிவிக்கும் ஒருபெருங்
கருணையமுதே! எனக்குக்
கண்கண்ட தெய்வமே! கலிகண்ட அற்புதக்
காட்சியே! கனகமலையே!
தாயெலாம் அனைய என்தந்தையே! ஒருதனித்
தலைவனே! நின்பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்ற தோரும் அந்தோ!
வாயெலாம் தித்திக்கும் மனமெலாம் தித்திக்கும்
மதியெலாம் தித்திக்கும் என்
மன்னியமெய் அறிவெலாம் தித்திக்கும் என்னிலதில்
வருமின்பம் என்புகலுவேன்?
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாம்
தோன்றிட விளங்கு சுடரே!
துரியவெளி நடுநின்ற பெரிய பொருளே! அருட்
ஜோதி நடராஜ குருவே!

என்னே! பாடலின் இனிமை! மீண்டும் மீண்டும் பாடிக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது, இல்லையா? ஏன் தயக்கம்? மனப்பாடமே செய்து கொண்டால் போகிறது. மற்றும், சென்னை கந்தகோட்டப் பதிகத்தில் ஓர் அருமை யான பாடல். இதோ!

''எத்திக்கும் என்னுளந் தித்திக்கும் இன்பமே!
என்னுயிர்க்கு உயிராகு மோர்
ஏகமே! ஆனந்த போகமே! யோகமே!
என்பெருஞ் செல்வமே! நன்
முத்திக்கு முதலான முதல்வனே! மெய்ஞ்ஞான
மூர்த்தியே! முடிவிலாத
முருகனே! நெடியமால் மருகனே! சிவபிரான்
முத்தாடும் அருமை மகனே!
பத்திக்கு உவந்தருள் பரிந்தருள நின்னடிப்
பற்றருளி என்னை யிந்தப்
படியிலே யுழல்கின்ற குடியிலே யொருவனாய்ப்
பண்ணாமல் ஆண்டருளுவாய்!
சத்திக்கு நீர் சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!

என்ன இருந்தாலும் இது அருட்பா அமுதம் அல்லவா? உள்ளம் முழுவதும் கொள்ளை கொண்டு நிற்கிறதே! இப்பாடல். மேலும், தேனைவிட அமுதம் சிறந்தது என்பார்கள். ஏன்? தேன்மட்டும் குறைந்ததா என்ன? எத்தனை ஆண்டுகள் ஆனாலும் தானும் கெடாமல் தன்பால் சேர்ந்த பொருளையும் கெடவிடாமல் காப்பாற்றக் கூடியதாயிற்றே! மேலும்,

சாதாரணத் தேனுக்கே இத்தனைச் சக்தி என்றால், மகிமை என்றால் சர்வலோக நாயகனாக விளங்கும் சண்முகப் பெருமானாகிய தேனின் சக்தியை, மகிமையை நம்மால் எடுத்துரைக்க இயலுமா?

> ''நேரிலா முதல்வன் வன்மை
> யாவரே நிகழ்த்தற் பாலார்''

என்பார் கச்சியப்ப சிவாச்சாரியார், மேலும், நாம் வீட்டிலோ அல்லது வெளியிலோ இருக்கும்போது எவரேனும் ஓடி வந்து இல்லை நம் வீட்டுச் சிறுவர்கள் ஓடி வந்து அப்பா! அப்பா! நம்ம வீட்டுத் தோட்டத்திலே வந்து பாருங்களேன். புளிய மரத்திலே பெரிய தேனடை கட்டியிருக்கிறது, என்பார்கள். இது சாதாரணத்தேன், ஆனால் நமது வடலூர் வள்ளலார் காட்டுந்தேன் சாதாரணத் தேன் அல்ல. கண்டோரைக் கவர்ந்திழுக்கும் காந்த சக்தி பெற்றது,

உண்டோரை உய்விக்கும் ஓங்கார சக்தி பெற்றது மேலும், அவர் காட்டுந்தேன், தேனினும் இனிய மலைத்தேன்.

இத்தேனின் சுவையின் உணர்ந்தோர் மலைத்தேன் (திகைத்தேன்) என்பார்கள். அதுவும் சாதாரண மலையில் உள்ளதேனா? தணிகை மலையில் உள்ள தேன் என்கின்றார். தணிகை மலையில் உள்ளது ஏன்? (உள்ளதேன்–உள்ளது+ஏன்?) என்கிறீர்களா? நமக்காகத்தான், நம் உடற்பிணியையும், மனக்குறைகளையும் அகற்றித் தணிக்கக் கூடிய தணி(க்)கை மலையல்லவா அது. எனவே, தணிகை மலைத் தேனாகிய மாணிக்க மலையிடம் காணிக்கையாகத் தம் நெஞ்சத்தையே அர்ப்பணித்து விடுகிறார் இராமலிங்கர்.

மேலும், உன்னைத் துதியாத வஞ்சகரின் கொடிய முகத்தைக் கூட இனி பார்க்க மாட்டேன் என்கின்றார். மேலும்,

பெருமானே! என் வருத்தம் அறுத்து அஞ்சேல் என அருள் செய்ய வேண்டும். இல்லையேல் என்னால் தாங்க முடியாது கண்ணே! சந்தனம்மணக்கும் தணிகைமலைத்தேனே! ஞானச் செழுஞ்சுடரே! என அவர் பாடும் பாடலை நாமும் பாடுவோமா?

கஞ்சன் துதிக்கும் பொருளே! என்
கண்ணே! நின்னைக் கருதாத
வஞ்சர் கொடியமுகம் பார்க்க
மாட்டேன்! இனியென் வருத்தமறுத்து
அஞ்சேல்! எனவந் தருளாயேல்
ஆற்றேன்! கண்டாய்! அடியேனே!
செஞ்சந் தனஞ்சேர் தணிகைமலைத்
தேனே! ஞானச் செழுஞ்சுடரே!

என்று அம்பிகையின் பாலனை, குமரவடிவேலனை, நம்பிச் சரண் புகுகின்றார். நாமும் அவன் திருப்பாதக் கமலப்போதில் வீழ்ந்து வணங்கி, திருவருள்தேனை உண்டுச் சுவைத்து ஆழ்ந்து இன்புறுவோமாக.

நேரிசை வெண்பா

ஐயா! தணிகைமலைத் தேனே! உனையன்றி
மெய்த்தெய்வம் வேறுண்டோ? மேதினியில்–பொய்யுலகில்
தப்பேது நான்செயினும் சண்முகனே! நீ பொறுத்து
அப்பா! எனைக்காத் தருள்,

சரணம்! சரணம்! முருகா!

---

குறிப்பு:- இக்கட்டுரை 31-12-73ல் திருத்தணி திருப்படி விழா மலரில் வெளி வந்தது.

# ஓடி வருக!

திரு: சி குமாரஸ்வாமி அவர்கள்:
"செந்திலகம்" (வண்டலூர்)

ஒரு வயது முதிர்ந்த பெரியவர். கல்வி, கேள்வி, அறிவு எல்லாவற்றிலும் வல்லவர்; அவர் ஒரு அழகான குழந்தையைக் கண்டார். அக்குழந்தையுடன் விளையாட ஆசைப் பட்டார்; மிக்க அன்புடன் கூப்பிட்டார், அக்குழவியும் துள்ளிக் குதித்து அவரிடம் ஓடிவந்தது, அப்பெரியவரும் அதனுடன் கொஞ்சி விளையாடினார். அதை நாமும் ரசித்து மகிழலாமே! நாம் கூப்பிட்டாலும் அந்தக் குழந்தை நம்மிடம் நிச்சயம் வந்து விளையாடும், அவர் கூப்பிடும் நயத்தையும் நாம் ரசித்து மகிழ்ந்து, அவ்வாறே நாமும் அழைப்போமே!

"முழுநிலவு போன்ற குளிர்ந்த முகம், இரண்டு காதுகளிலும் நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மகரகுண்டலங்கள், அன்றலர்ந்த தாமரை போன்ற இரு அழகிய விழிகள், அருள் நிறைந்த உள்ளம், அவ்வுள்ளத்தின் மகிழ்ச்சியால் ஏற்பட்ட புன்சிரிப்பு, அதனால் தெரியும் முத்துப் போன்ற பற்கள், ஆயிரங் கோடி உதயசூரியன்கள் ஒன்று சேர்ந்தது போல் விளங்கும் செந்நிறமான ஜீவகாருண்யம் ததும்பும் மேனி (உடல்), தோளிலே வாகுவலையம், கடப்ப மலர்மாலை, அதிலுள்ள தேனை நுகரும் வண்டு, பலவித (உயர்ந்த) மணிகளால் இழைக்கப்பட்ட (பரிபுரம்) காற்சிலம்பு அணிந்த இரண்டு தாமரை போன்ற திருவடிகள், நீண்ட கையிலே வெற்றியைத் தரும் வேல், அருகிலே உள்ள மயில், இத்தனையும் ஆட (என்கண் முன்னே) நீ விளையாட ஓடிவருக!" என்று கூப்பிட்டார்.

இப்பொழுது தெரிகிறதா அக்குழந்தை யார் என்று? தெரியாவிட்டால், அதையும் அவரே சொல்கிறார். "பழமை

யான (நான்கு) வேதங்களும், காமிகம் முதல் வாதுளம் வரை உள்ள இருபத்தெட்டு ஆகமங்களும் (முழங்கிக்கொண்டிருக்கும்) துதிக்கும் புள்ளூர் (வைத்தீச்சுரன் கோயில்) வாசியான செல்வனே!......(முத்துக் குமாரஸ்வாமியே!), மூன்று கண்களையுடைய, கல்லால் நிழலமர் சிவனுராகிய குருவுக்கும் (தக்ஷிணுமூர்த்திக்கும்)குருவானவனே! முத்தருக்கும் யோகம் செய்யும் சித்தர்கட்கும் குருவே! என்றும் இளையவனுன முத்துக்குமாரஸ்வாமியே! எனது குருவே''

பெரியவருடன் விளையாடவந்த குழந்தை யார்? என்பது விளங்கி விட்டது. குழந்தைக்கு பாட்டென்றுல் மிகவும் பிடிக்கும். ஆகவே, பெரியவர்கனிவும், தெளிவும் பொருந்திய அருட்கவிதையால் மிகுந்த அன்புடன் அழைக்கிருர். அக்கவிதை இதோ:–

'மதிவதனமாட இருகாதில் நவரத்னமணி மகரகுண்டலமாட நாண்
மலர்ப்புண்டரீக விழியாட அருளாட மனமகிழ் மந்தகாச மாடக்
கதிர் உதயமாயிரங் கோடியெனவே யிலகுகாருண்ய மேனியாடக்
கனவச்ர புயவலய மாடவண்டாடக் கடப்பமலர் மாலையாட

விதமணியிழைத்த பரிபுரமாடு சரணுர விந்தங்களாட நீள்கை
வெற்றிவேலாட என்கண்முனீ விளையாட வோடி வருவாய்
முதுமறைகளாகமம் முழங்கு புள்ளூரனே முக்கண் குருக்கள் குருவே
முத்தர்குருவே யோகசித்தர் குருவே பாலமுத்துக் குமாரகுருவே!''

–(ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருவருட்பா–1)

''குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்'' அல்லவா! பாட்டுக்கு மயங்காதார் யார்? எனவே இந்த (தெய்வ)க் குழந்தையும், இன்னும் பாடினுல்தான் உன்னேடு விளையாட வருவேன் என்கிறது. முதியவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. உடனே, மேலும் 9 (ஒன்பது) பாடல்களைப் பாடுகிருர். (மொத்தம் பத்து பாடல்கள்) இனி மேலும் குழந்தை வராமலிருக்குமோ? அவர் அழைத்தபடி ஓடோடி வந்தது.

அம்முதியவர் யார் தெரியுமோ? அம்மகான், திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் பத்தாவது குருமஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள். இவர் பாடிய பத்துப் பாடல்களுள், முதலாவது பாடல்தான் மேலே உள்ளது. இது ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருவருட்பா புள்ளிருக்கு வேளூர்தல வரலாறு (தருமை யாதீன வெளியீடு எண் 62-1960) என்ற புத்தகத்தில் (பக்கம் 47 முதல் 52 வரை) இவ்வருட் பாடல்கள் உள. ஸ்ரீவைத்யநாத சுவாமி திருக்கோயில் மஹாகும்பாபிஷேக விழா மலரிலும் இவை உள. தருமையாதீன வெளியீடு எண். 610- 2- 7- 69.

முடிவுரை:- வைத்தீச்சுரன் கோயில் ஸ்ரீ செல்வமுத்துக் குமாரஸ்வாமி எங்கள் குலதெய்வம். மேலே உள்ள பாடல் அடியேனுடைய நித்யபாராயணம் பாடல்களில் ஒன்று. அடியேன் வழிபடு தெய்வமும் எந்தை திருச்செந்தில் கந்தவேள்!

இந்தப் பாடலின் அழகுநடை என்னைக் கவர்ந்தது அதன் பலனே இக்கட்டுரை. இதை எழுதும் இன்று சித்திரைமாதம் முதல் தேதி! ஆனந்தவருடம்! எனவே (நமது) குமரகுருபரன் வாசகஅன்பர்களும், அதன்ஆசிரியராகிய தாங்களும், மற்றும் யாவரும் பல்லாண்டு பல்லாண்டு ஆனந்தமாக இருக்க அருள் புரியுமாறு எந்தை திருச்செந்தில் கந்தவேளை எப்போதும் முப்போதும் பிரார்த்திக்கிறேன்.

அடியேனுடைய குலதெய்வம் முத்துக்குமாரஸ்வாமி, நமது, குமரகுருபரனின் பாதுகாவலரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமித் தம்பிரான் சுவாமிகள் அடியேன் பெயரும் குமாரஸ்வாமி என்ன அருமையான பொருத்தம்!

முருகா சரணம்!

# "அடைக்கலம்"

திரு, வித்துவான்: க, சேதுராமலிங்கன் அவர்கள்;
[தமிழாசிரியர்] அரசினர் உயர்நிலைப்பள்ளி.
இராமேச்சுரம்.

1) கத்தும் தரங்கக் கடற்கரையில்
கவினுர் செந்திற் பதியமர்ந்த
முத்துக் குமரா! முருகையா!
முதல்வா! என்றன் துயர்தீர்ப்பாய்!
பத்தர்க் கருளும் பரிசுடையாய்
பகழிக் கூத்தன் பிணிதீர்த்த
அத்தா! அலைவாய் உகந்தவனே!
அடியேன் உன்றன் அடைக்கலமே!

2) மலைவாய்த் தவழ்ந்து விளையாடும்
மங்கை உமையாள் மகிழ்மகனே!
சிலைவாய்த் தனது திறங்காட்டும்
செம்மான் மருகா! செந்தூரா!
கலைமான் புனம்கான் காத்துவரும்
கன்னி வள்ளி மணவாளா!
அலைவாய் அமர்ந்த அருளாளா!
அடியேன் உன்றன் அடைக்கலமே!

———

# 'வேடிக்கை மனிதர்'

புலவர்: திரு தெ முருகசாமி பி. ஓ எல் அவர்கள்
காரைக்குடி.

தேடிச் சோறு நிதந்தின்று-பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி-மனம்
வாடித் துன்பம் மிகஉழன்று-பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து-நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி-கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்-பல
''வேடிக்கை மனிதரைப்'' போல-நான்
வீழ்வேன் என்று நினைத்தனையோ?

என்று பராசக்தியிடம் கேட்டார் பாரதியார். பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது இப்பாடலாகும். பாரதியார் வேடிக்கை மனிதர் என்றுரைக்காமல் ,பல; வேடிக்கை மனிதர் என்று கூறியதால் அவர் 'நோற்பார் சிலர் பலர் நோலாதவர்' (குறள் 270) என்ற திருவள்ளுவரின் கருத்தை அரண் செய்வதாகப் பாடினார் எனக் கருதலாம்.

வள்ளுவர் வாழ்ந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர் பாரதியார். இவ்வுலக வாழ்க்கையை வள்ளுவர் எந்தப் பார்வையால் பார்த்தாரோ அதே பார்வையால் பாரதியாரும் பார்க்கின்றார். இதனால் இவ்விருவர்க்கும் இடைபட்ட காலங்களில் உண்டான மனித வாழ்வின் வளர்ச்சி எத்தகையது என்பதை ஒருவாறு உணர முடிகின்றது. எனவே மனித வாழ்வின் வளர்ச்சி புறவாழ்க்கையைப் பொருத்தே வளர்ந்து வந்துள்ளதன்றி அகவாழ்க்கையைப் பொருத்து வளரவில்லை எனத்தெற்றெனத் தெரிகின்றது. புறவாழ்வின் வளர்ச்சிக்காக எண்ணங்கள் மாறுபடுவது போல அகவாழ்க்கையின் வளர்ச்சிக்காகவும் எண்ணங்கள் மாறுபட்டு விரிவடைய வேண்டுவது சமய அடிப்படையில் காலத்தை ஒட்டிய நிலையான கருத்தாகும்.

எவ்வளவு நாள் வாழ்வோம் என்பதை மட்டும் கணக்கிட்டுக் கொண்டு எப்படி வாழ வேண்டும் என்பதை அறுதியிட்டு வாழமுடியாத மனிதர் வேடிக்கை மனிதராவார். வையத்துள் வாழ்வாங்கு வாழவில்லை என்றாலும் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற சராசரி வாழ்க்கையையாவது உணர்ந்து வாழத் தெரியாதவர்கள் வேடிக்கை மனிதர்களன்றி வேறு எத்தகையராவார்? அவர் செய்தற்கரியன செய்யாவிட்டாலும் செய்தற்குரியதையாவது செய்யவில்லை எனில் இவ்வுலகில் வாழ்ந்து பயன் என்? எனவே வாழ்க்கையை வேடிக்கையாகக் கருதிக் கொண்டு வாழ்பவர் உலகிற்கு வேடிக்கைப் பொருளாக மாறிவிடுவர் என்பது ஒருதலை,

பிறப்பும் இறப்பும் உலகத்தியற்கை, இவை அனைத்துயிர்க்கும் ஒத்த தன்மையன. இவைகளுக்குப் பெருமையில்லை. ஆனால் பிறப்பிறப்புகளுக் கிடைப்பட்ட வாழ்க்கை என்பது மதிக்கத்தக்கது; காலத்திற்கேற்ற வளர்ச்சியையுடையது. அதுவும் மக்களது வாழ்வை ஒட்டியே சிறப்படைவது எனவே உலக இயக்கம் நன்குநடைபெற வேண்டுமாயின் வாழும் முறையறிந்து வாழவல்ல மாந்தர் கூட்டம் பெருக வேண்டும்.

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லோரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே. (புறம்-195)

என்று நரிவெரூஉத்தலையார் என்னும்சங்கப்புலவர் ஓம்படைக் கிளவியால் உலகிற்கு அறிவுரை கூறினார் அவர்சான்றோர்களை விளித்துக் கூறினரேனும் பயனில்லாது மூத்தவர்களே என்ற இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றுமாறு 'பயனில் மூப்பின் பல் சான்றீரே என்றார். வயதிற்கேற்ற அறிவு தேவை என்பது இதன் பொருள்,

''கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ''

என்று எமன் வரும் செய்தியை வலியுறுத்துவது ஈரிவெரு உத்தலேயாரின் நோக்கமன்று.

''நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின்''

என்பதை வலியுறுத்துவதே புலவரின் தலையாய நோக்கமாகும். எனவே வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய நெறியறிந்து வாழ்வது மாந்தர்தம் கடன்,

மேற்கண்டவாறு வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உண்மையைச் சமயஆற்றலில் வளர்ந்த பக்குவப்பட்ட ஆன்ருேர்கள் பலரும் பல்வேறு வகையாகக் கூறியுள்ளார்கள், திருவள்ளுவர்.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேல்சென்று செய்யப் படும். (335)

என்று வாழ்வின் நிலையாமையை யுணர்த்தி முன்னர் செய்த அறத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துகிருர்.

கிழவருமாய் நோய்மூப்புக் கீழ்ப்பட்டுக் காமத்
துழவரும் போய் ஓயுமா கண்டோம்—மொழிதெரிய
வாயினல் இப்போதே மன்றில் நடமாடும்
நாயனுர் என்றுரைப் போம் நாம். (கோயில்நான்மணி-13)

என்று பட்டினத்தார் நோயின் கீழும் மூப்பின் கீழும் அகப்பட்டுழலும் வாழ்க்கையில் அம்பலக் கூத்தனின் திருநாமத்தைச் சொல்லி வாழ்வோம் என்று வாழுங்காலத்து நெறிமுறையை விளக்கிக் காட்டினுர்.

'அப்போதைக்கிப் போதேசொல்லி வைத்தேன்' என்பது போல அருணகிரிநாதரின் கீழ்க்கண்ட கந்தரலங்காரப் பாடலும் மேற்கண்ட உண்மையை உணர்த்திக் காட்டுகின்றது

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்ருற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றேகவி கற்கின்றதே.

எனவே வாழுங்காலத்து நெறிமுறையறிந்து வாழாதார் வேடிக்கை மனிதராவார் என்பது வாழ்வின் எல்லா நிலையில் உள்ளவர்களுக்கும் பொருந்துவதோர் உண்மையாகும்.

# வழிபாடு செய்யும் வேடன்

திரு; ர. வேங்கிடரத்தினம் அவர்கள்,
E- 168 அண்ணா ரோடு, (ப்ளாக் 17)
நெய்வேலி-1.

-O-

இறையடியார்கள் இறைவனை வழிபடுதலோடு நில்லாமல், மற்றைய இறைத்தொண்டர்களையும் போற்றியும் ஏற்றியும் பேசுவர்; பாடுவர், ஞானசம்பந்தர் கண்ணப்பரைப் பாடியே காளத்தீசரை வணங்குவார்.

கண்ணப்பநாயனுர் திருக்காளத்தித் தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை வழி பட்டு வணங்கிய வேடர் ஆவார் அவர் தம் வாயிலேயே தூயநீரை நிரப்பிக் கொண்டு வந்து, சிவலிங்கத் திருவுருவின் மீது வாய் நீரினலேயே நீராட்டு நடத்தி வைத்தவர், இச்செய்கையில் அந்த இறைத்தொண்டரது பெருமை அவ்வளவாகத் தெளிவுபடாது இருக்கலாம். சிலர்க்கு இலேசாக ஓர் அருவருப்புக் கூடத் தலையெடுக்கலாம் இது என்ன காரியம் என்று.

தொடர்ந்து அடுத்த அடியில் மெய் சிலிர்க்கும் வண்ணம் கண்ணப்பரின் இறைப் பற்றினைப் பாடுவார் சம்பந்தர், தம் பூப்போன்ற கண்ணைக் கொடும்அம்பினல் தோண்டியெடுத்து ஐயனுக்கு அளித்தார், பின் இறைவனடி கலந்து உய்ந்தார் அவர். இத்தகைய பெருமைபடைத்த பதி காளத்தி எனப் பாடும் சம்பந்தர் பதிகம். வேடன் ஈசனடிகூடு காளத்தி மலையே! அடியார் உயர்வு ஐயனின் மேம்பாட்டினை உணர்த்தும்,

வேயனைய தோள்உமையொர்
பாகமது வாகவிடை யேறி கடைமேல்
தூய்மதி சூடி சுடு காடில் நட
மாடிமலை தன்னை வினவில்

வாய் கலசமாக வழி பாடுசெயும்
வேடன் மலராகும் நயனம்
காய்கணையி னாலிடந்(து)
ஈசனடி கூடு காளத்தி மலையே.

இப்பாட்டில் முற்பகுதி ஐயனைப் பேசும்; பிற்பகுதி அடியவரைப்பாடும். இறைவன் நமக்கு நன்குத் தெரிந்தவர்தாம். பசு மூங்கிலை யொத்த தோள்களைக் கொண்ட பார்வதியம்மையார் பாதியுடம்பில் வீற்றிருக்க, எந்தை இடப வாசனம் ஏறிச் செல்பவர் தலை முடியோ சடையாக முறுக்கிப் பின்னிக் கிடக்கிறது அவர்க்கு. ஆங்குப் பரிசுத்தமான வெண்ணிலா சூடியுள்ளார், இக்கோலத்தில் சுடுகாட்டினையே அரங்கமாகக் கொண்டு அங்கே நர்த்தனம் புரிபவர் சிவபெருமான், அவருடைய மலை எதுவென எவரேனும் தம்மைக் கேட்டால், சம்பந்தர், வேடன் ஈசனடி கூடுகாளத்தி மலையே என்பாராம். இப்பாட்டில் வரும் ஈசன் தோற்றவர்ணனை மாறி மாறி அழகும் அழகற்றதுமாகப் பேசும், முதலில் மூங்கில் அனைய தேவியின் திருத்தோள்கள்; தொடர்ந்து முரட்டுச் சடாமுடி; அடுத்து அருமையான சந்திரக்கலை, உடன் சுடுகாட்டுப்பேச்சு; அங்கோ நிகழ்வது ஆனந்தத் தாண்டவம்!

கண்ணப்பரின் பெயரினைப் பாடல் கூறவில்லை. வாய் கலசமாக வழிபாடு செயும் வேடன் என்பதாக ஒரு பதிர் அவிழ்ப்பார், பிள்ளையார். அடுத்து, நெஞ்சையள்ளும் வகையில், கூரிய அம்பினால் கண்ணைப் பெயர்த்துத் தந்து ஆண்டவனோடு இணைந்தவர் எனப்பாடுவார்! இத்திருப்பாட்டில் கண்ணப்ப நாயனாரின் பெருமையே பேசப்பெறும்.

சிறுத்தொண்ட நாயனாரின் சிறப்பினைச் சொல்லும் பதிகமும் சம்பந்தர் திருவாயினின்று வரும்.

சிறுத்தொண்டன் கணபதீச்சரம் என்று அத்தலத்தினை அவர் வணங்கிய பதியாகப் பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் சம்பந்தர் பாடுவார், பதிகம் 'பைங்கோட்டு மலர்ப் புன்னை.' எனத்தொடங்கி விரியும் பாடல் பெற்ற பதிகள் எனக்கூறிப் பழம் பெரும் தலங்களை ஏற்றிப் போற்றும் மரபினை ஒட்டி, ஆளுடைய பிள்ளையார் திருச்செங்காட்டங்

குடிப் போந்த போழ்து, சிறுத்தொண்டரினால் பாடப்பெற்ற பதியாக அவ்வூர்க் கணபதீச்சரத்தினைப் புகழ்ந்து பணிவார்.

பொன்னம் பூங் கழிக் கானற்
புணர் துணையோ டுடன் வாழும்
அன்னங்காள் அன்றில்காள்
அகன்றும் போய் வருவீர்காள்
கன்னவில் தோள் சிறுத்தொண்டன்
கணபதீச் சரமேய
இன்னமுதன் இணையடிக் கீழ்
எனதல்லல் உரையீரே.

இப்பாடல் ஐயனைத் தன் தலைவனாகக் கொண்ட அடியவள் ஒருத்தி தன் பிரிவுத் துயரத்தினை அருகில் உள்ள பறவைகளை அழைத்து அவற்றின் வாயிலாகச் சொல்லியனுப்புவதாகப் புனையப்பெற்றது. அன்னங்களையும் அன்றிற் புட்களையும் விளித்துத் தலைவி, எப்போதுமே வெகுத்தொலைவெல்லாம் பறந்து சென்று பழக்கப்பட்ட நீங்கள் எனக்காகத் தூது சென்று வரலாகாதா எனக்கேட்பாள். தங்க வண்ணம் கொண்டு ஒளிரும் எழில் மிகுந்த மலர்கள் நிறைந்த கடற்கரைத் தோப்புகளிலும் கழிகளிலும் தம் துணைப் பறவையோடு இணைந்து இசைந்து வாழும் பறவைகளிடம் நாயகி பேசுவாள். சிறுத்தொண்ட நாயனர் வழிபடும் கணபதீச்சரத் தலத்தில் கோயில் கொண்ட இனிய அமுதம் போன்ற எம் பெருமானிடம் சென்று தன் துயரினை அப்புட்கள் தெரிவிக்குமாக!

தினமும் எங்கெங்கோ பறந்து செல்லும் புட்கள் தன் பிரிவுத் துயரைத் தெரிவித்ததற்காகத் தூது போகலாகாதா என்பது நாயகியின் வேண்டுகோள். இறைவனின் திருச்செவிகளில் அல்ல, திருவடிகளில் துயரினை உரைக்க வேண்டும் எனும் இடத்தில் சம்பந்தர் தம்மறியாது, முற்றிய இறையுணர்வில் தவறு செய்வர். நாயகி பேசும் பாவாகத் தொடங்கும் அவர் பக்தி மேலீட்டில் பரமன் திருத்தாளிடத்தே போய்ச் சொல்லுக. எனப் பறவைகளுக்கு வேண்டுகோள் விடுத்தல் இவ்வண்ணம் எழுந்ததே! செவிகளில் அல்லவா முறையிடல் முறை?

திருநீல நக்க நாயனுர் நக்கர் எனவும் அழைக்கப்பெறும் சிவனடியார் ஆவர். அவர் பெயருடன் தொடர்பு பெற்ற திருத்தலம் திருச்சாத்தமங்கை எனப்படும். ஆங்குள்ள சிவாலயத்தினைப் பாடலில் அயவந்தி எனக்கூறுவர். நக்கர் வணங்கிய அப்பெருமானைக் கவுணியர் பாடுவார். அப்பதிகம் முழுதும் இறைவன் அம்மையோடு வீற்ற திருக்கோலத்தைப் பாடுவதாக அமையும்.

பொடிதனைப் பூசுமார்பிற் புரி நாலொரு பாற்பொருந்தக்
கொடியன சாயலாளோ டுடனுவதுங் கூடுவதே
கடிமணம் மல்கி நாளுங் கமழும் பொழிற் சாத்தமங்கை
அடிகள் நக் கன் பரவ அயவந்திய மர்ந்தவனே.

விபூதியை நெடுகப்பூசிய திருமேனி; திருமார்பின் ஓர் புறத்தே முப்புரி நூல் அழகுறப் பொருந்தி நிற்கிறது. கொடிபோன்ற எழில் மிகுத் தோற்றம் பெற்ற தேவியுடன் ஒரு சேர இணைந்து எழுந்தருளி நிற்பர் எம்பெருமான். இனிய நன் மணம் எப்போதும் மண்டிப் பரவிக்கிடக்கும் பூஞ்சோலைகள் நிறைந்த ஊரான சாத்தமங்கையெனும் பதியில் திருநீல நக்க நாயனுர் பாடிப் புகழ் பரப்பிய அயவந்தித் திருக்கோயிலில் அப்பெருமான் உள்ளார்.

கடைசிப் பாட்டில், சம்பந்தர் நிறையினுர் நீலநக்கன் நெடுமா நகரென்று தொண்டர் அறையுமூர் சாத்தமங்கை அயவந்தி எனப்புகழ்வார். அடியாரினுல் ஐயனுக்குப்பெருமை உண்டு!

கோச்செங்கட் சோழமன்னர் சிவாலயம் பலகட்டியும் புதுக்கியும் சிவப்பணியாற்றிய அடியவர் ஆவார். அவர் பெருமையினை ஆங்காங்குப் பலவிடங்களில் காழியர் தலைவர் உரைப்பார்.

ஆனைக்கா. வைகல், அம்பர்மாகாளம் போன்ற பலத் தலத்து மாடக்கோயில்களைக் கண்ணுறும் போதும், சம்பந்தர் நன்றியுடன் சோழ மன்னரின் நினைவு கூர்வார்,

மெய்யகம் மிளிரும் வெண்ணூலர் வேதியர்
மையகண் மலைமக ளோடும் வைகிடம்
வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசைச்
செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே.

உண்மைப் பொருள் ஒளிவீசிச் சுடரும் மறைகளைக் கற்ற வெண்ணூல் அணிந்த வேதியர் வசிக்கும் தலம். அஞ்சனம்

தீட்டிய கண்கள் கொண்ட பர்வத மன்னன் மகள் உமை வெண்ணூல் அணிந்த உடலில் கண்ணைப் பறிக்கும் வேதநாயகனோடு உறையும்தலம் திருவைகல் ஆகும்! வைகல் ஊருக்குள் மேற்குப்புறத்தே உள்ள திருக்கோயில் உலகத்தார் அனைவரும் வணங்கிச் சிவானந்தத்தில் திளைத்தற்காகக் கோச் செங்கட்சோழ மன்னர் எடுத்துக் கட்டியதாகும்!

இதேபோல், திருவம்பர்மாடக் கோயிலைப் பற்றிப் பாடுகையில், சம்பந்தர் பெருமான்.

செங்கண் நல்இறை செய்த கோயில் சேர்வரே,
குரிசில் செங்கணவன் கோயில் சேர்வரே,
செய்யகண்ணிறை செய்த கோயில் சேர்வரே
என்றெல்லாம் நினைவூட்டுவார் மன்னவர் பணியினை.

நடராசப் பெருமான் என்றுமே நீராடலில் மூழ்கிய மூர்த்தி. சிற்சபையில் நர்த்தனம் எனும் ஆடல்மட்டும் அன்றி நித்தம் நெய், பால், தயிர் என்று பல்வாறும் ஆடுபவர். அவருக்கு ஆங்கு அபிஷேகம் செய்து வைத்தற்குத் தில்லை மூவாயிரவர் உள்ளனர், தில்லைவாழ் அந்தணர் சிவனுருடைய ஆதி அடியார்களுள் அடங்கியவர்கள்; கைலையம்பதியினின்று பெருமானோடு வந்தவர்கள் அவர்கள் எனவே தில்லைவேதியர்களைக் காழியார் கோன் பாடாது போவரோ?

ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும்
பல்சடைப் பனிகால் கதிர் வெண்திங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம் தொல்வினையே.

சிவபெருமான் நல்ல மணம் கமழும் கொன்றை மலரை உவந்து ஏற்பவர். வேதமும் கீதமும் பாடியருள்பவர். தலைமுடியோ சடை சடையாகத் தொங்குகிறது அதில் குளிர்ச்சி பெற்ற கதிர்களை வீசும் சந்திரனைச் சூடியுள்ளார். இத்தகைய கோலம் பூண்ட எம்பெருமான் நல்ல மணம் பொருந்திய பசு நெய்யிலும் பால் தயிரிலும் மூழ்கிய வண்ணமே உள்ளார். எங்கு? தில்லையில்! அவ்வூரை விட்டுத் திருமணத் தொடர்புகளுக்காகக்கூட எல்லை தாண்டியறியாத தீட்சிதர்த் திருக்குலத்தினரின் ஊராகிய சிற்றம்பலத்தை அம்பலவாணன் தம் இடமாக ஏற்றுள்ளார்.

தம் பழவினைகள் போய்விடுமாறு அருளைச் சொல்லிப் பரமனிடம் பிரார்த்தனை!

# பித்தன்

திரு. கு, சோ; முருகன் அவர்கள்,
சர்வசன உயர்நிலைப்பள்ளி,
கோயமுத்தூர்–641004

-O-

1. சந்திரன் கங்கை என்பார் தலையினில் ஏறி ஆட
வெந்திறல் நாகம் ஆகத் தெங்கணும் திரிந்தே ஓட
வந்துறும் வெகுளி இன்றி வாளாநீ இருத்தல் கண்டோ
சுந்தரன் போன்றோர் நிற்குச் சூட்டினர் பித்தன் நாமம்.

2. சுடலையின் வெந்த நீற்றைச் சுண்ணமாய்ப் பூசிக் கொண்டும்
உடலினில் மாலையாக எலும்பினைப் பூண்டு நின்றும்
உடையெனத் தோலு டுத்தும் உழிதரும் தோற்றம் கண்டோ
நடநவில் எந்தாய் உன்னை நாடொறும் பித்தா என்பர்.

3. ஓரிடத் திருக்க மாட்டீர் ஊர்தொறும் திரிவீர் நல்ல
பேரிடப் பெண்ணைக் கொண்டும் பெருவிடந் தன்னை உண்பீர்
ஊரிட மன்றமெல்லாம் ஒழியாது ஆடி நிற்பீர்
பாரிடத் துள்ளார் நும்மைப் பித்தெனல் இதனல் தாமோ.

4. தூயநீர்க் கங்கை யாறும் தூமலர்க் கொன்றைத் தாரும்
தூயநற் பிறையும் கொண்ட தூயனே! பன்றிக் கொம்பும்
தீய பாம்(பு) ஆமை ஓடும் தீப்புலால் நாறும் என்பும்
சேயஉன் மேனி தன்னில் சேர்த்தலால் பித்தென் றுரோ.

5. ஏர்மதி சூடிநின்றாய்! எழில்அரசு, அளித்த பெண்ணும்
பார்வதி முருகன் பிள்ளை யாரெச் சுற்றம் கொண்டும்
நீர்அதி தூரம் சென்று நெடுந்துய ருற்றுப் பிச்சை
பாரதில் பெற்ற தன்மை பார்த்தேயோ பித்தன் என்பார்.

6. மாட்டினை ஏறிச் சென்றாய் மாபெரும் ஊர்தி யாக,
வீட்டினைச் சுடுகா டென்றாய், விரும்பிநீ உண்ப தோதான்
கேட்டினைத் தரும்தீ நஞ்சு, கேட்டிடில் இவற்றை எல்லாம்
கூட்டியோ பித்தன் என்று கூறினர் குவலயத்தார்.

7. அன்புடை உமையாள் தன்னை ஆணவத் தக்கன் பாலும்
இன்பிலா மீனவர்தம் இழிகுடில் தனிலும் சென்று

அன்னவர் மகளாய்த் தோன்ற அனுப்பியே பிரிவீர், ஆனல்
அன்பிலாக் கங்கையாளைச் சுமக்கின்றீர் பித்தன் நீரே.

8. மலரினைத் தூவி நின்ற மதன்தனைக் காய்ந்தாய், காலால்
மலரினை அகற்றி எச்சில் உமிழ்ந்தவற்(கு) அருள்பு ரிந்தாய்
அலரவன் அரிஎன் பார்க்கு அடியையும் காட்டா நின்ருய்!
சிலருனைப் பித்தன் என்றல் சிவனேஇங்(கு) இவை அறிந்தோ,

9. தந்தையின் தாளை வாளால் தடிந்தஓர் வன்மனுக்கு
எந்தைநீ தந்தாய் வாழ்வு என்பது மட்டும் இன்றி
முந்தைஓர் சாக்கியன்முன் வந்துனைக் கல்லால் வீச
சிந்தையில் கருணை நேர்ந்தாய் சொல்லிடில் பித்தன் நீரே.

10. தீமையே செயினும் தங்கள் பிள்ளைக்கு நன்றே எண்ணும்
தாய்மையின் மாரு அன்பைத் தரையுளார் பித்தென் பார்கள்
வாய்மையில் பித்தன் நாமம் வாய்த்தது உமக்கும் இந்தத்
தாய்மையின் மிக்க அன்பு தந்தருள் தன்மை யாலே.''

---


## ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக்கழகம் – குத்தாலம்
## ஆண்டு விழா மலர் 1974

ஒரு ஆண்டில் 54 வாரவழிபாடுகளை நிகழ்த்தியுள்ளது என்பதி லிருந்தே இக்கழகத்தின் அரிய சாதனையும் அதன் செயலர் திரு. சி. கோவிந்தராஜுலு அவர்களின் அயரா உழைப்பும் சீரிய தொண்டும் நன்கு விளங்கும். தருமையாதீன 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசன்னி தானம் அவர்களின் அருளாசியும் வாரவழிபாட்டுக் கழகம் பெற்றுத் திகழ்வதும் அதற்குக் கிடைத்த பெரும் பேருகும்.

ஆண்டு மலரில் அறிஞர் சான்றோர் பலராலும் எழுதப்பெற்ற அரிய கட்டுரைகளும்தருமை, துறைசை ஆதீனங்களை நிறுவியருளிய பல ஆதீனஸ்தாபகர்களின் அருள் வரலாறுகளும் சோழ தேசத்தி லுள்ள க்ஷேத்திரங்களின் சிறப்பும் பெருமையும் தலவரலாற்றுச் சுருக்கமும் எளிய இனிய தமிழில் கொண்டு மிளிர்கின்றது சுமார் 150 பக்கங்கள் கொண்டது.

விலை தபால் செலவு உட்பட ரூபாய் மூன்று

கிடைக்குமிடம்:–

ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக்கழகம்
குத்தாலம் (609801), தஞ்சாவூர் மாவட்டம்

# திருமகேந்திரப்பள்ளியில் சிவாச்சாரியார்

## படிக்காசு நிதி – ரூ. 4,500/-

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றிருப்பதும் தஞ்சைமாவட்டம் சீகாழி தாலுக்காவில் காவிரியின் வடகரையிலுள்ளதும் ஆகிய திருமகேந்திரப்பள்ளி என்றும் சிவஸ்தலத்தில் பூசனை புரியும் சிவாச்சாரியார் ஒருவருக்கு நாடோறும் படிக்காசு அளித்தற் பொருட்டுஇம் முதற்பொருள் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப் பெற்றது. இது ''திருமகேந்திரப்பள்ளியில் சிவாச்சாரியார் படிக்காசு நிதி'' எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 4,500/-. இது பின்வருமாறு முதலீடு செய்யப்பெற்றுள்ளது:–

| நெ. | வங்கியின் பெயரும் ஊரும் | எண் | முதலீடு தேதி | திரும்ப வாங்க வேண்டியதேதி | வட்டி விகிதம் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய கூட்டுறவு வங்கி கும்பகோணம் | 16119 | 3-9-73 | 3-10-80 | 9% | ரூ. 800/- |
| 2 | ஷை | 16123 | 8-9-73 | 8-10-80 | 9,, | ரூ. 1700/- |
| 3 | கும்பகோணம் சிட்டி யூனியன் பாங்க் திருப்பனந்தாள் | 27786 | 13-3-73 | 13-3-74 | 7,, | ரூ. 1000/- |
| 4 | மத்திய கூட்டுறவு வங்கி திருப்பனந்தாள் | 0003 | 13-12-74 | 13-1-81 | 9-1/2,, | ரூ. 1000/- |
| | | | | | ஆக...... | ரூ. 4500/- |

ஆக ரூபாய் நாலாயிரத்து ஐந்நூறு. இது நம்பேரிலும் நமக்குப்பின் ஸ்ரீகாசிமடத்து அதிபர் பெயரிலும் இருந்து வரும்.

இது நம்மாலும் நமக்குப்பின் காசிமடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்.

3. இம்முதற் பொருளினின்றும் கிடைக்கும் வட்டித்தொகையில் நாடோறும் ஒருருபா வீதம் திருமகேந்திரப்பள்ளி திருமேனியழகீசுவரர் சிவாலயத்தில் பூசனை புரியும் சிவாச்சாரியார் ஆதிசைவ/அந்தணர் ஒருவர்க்கு மட்டும் படிக்காசு அளிக்கப் பயன்படுத்தப் பெற்றுவரும். ஷை ஆதிசைவ அந்தணர் தாம் பணிசெய்வதாக ஷை

கோவில் நிர்வாக அதிகாரி அல்லது டிரஸ்டியிடமிருந்து அத்தாட்சி பெற்று அனுப்பியதும் அவ்வம் மாதத்திற்குரிய படிக்காசுத்தொகை இச்சிவாச்சாரியாருக்கே அனுப்பிவைக்கப் பெறும்.

4. வட்டி வரவிற்கேற்பப் படிக்காசுத் தொகை குறைக்கவும். கூட்டவும் பெறும்.

5. இம்முதற் பொருள் திருப்பியளிக்கப் பெற்றதும் அதிகவட்டி வரக்கூடிய அரசியல் கடன்தாள்களிலோ நீண்டகால முதலீடு களிலோ முதலீடு செய்யப் பெற்றுவரும். இம்முதற் பொருள் நம் பேரிலும் நமக்குப் பின்வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்து வரும்.

திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரு மகிலொடு கணவனை புகுதரும்
வரைவிலால் எயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை அழகனை அடியினை பணிமினே. —சம்பந்தர்

குறிப்பு:— இந்த அறக்கட்டளை ஏற்படுத்தச் சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களின் மூ. மு. 21030/74 தேதி. 3-4-74-ல் ஒப்புதல் அளிக்கப் பெற்றுள்ளது.

Tirupanandal
25—4—1974 } (Sd.) Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at the Sub-Registrar's Office Tiruvidaimarudur on document No. 10. on 27—4—1974 Book-4, Volume 59 Pages 187to 188.



உ

சொக்கலிங்கந் துணை

# திருநாரையூரில் நம்பியாண்டார்நம்பிகள் நினைவு

## திருமுறைத் திருவிழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின் வண்ணம் நடத்தப்பெறுவது

**ஆனந்த ஆண்டு வைகாசிப் புனர்பூசம் 11உ**
**(25—5—1974) சனிக்கிழமை**

திருமுறைவாணர்கள்:

1. திருமுறைக் கலாநிதி, சுரலய இசைவள்ளல் திரு. M. கனகசபைப் பிள்ளை, ஸ்ரீ காசிமடம் சிவ சிவ ஒலிமண்டப ஓதுவார், சிதம்பரம்.
2. திருமுறைக்கலாநிதி, திரு. M. சுப்பிரமணிய முதலியார், தேவார ஆசிரியர், திருப்பனந்தாள்.
3. ஆடல்மாமணி திரு. S. சட்டைநாத முதலியார், திருப்பனந்தாள்.
4. திரு. மா. முத்தையா தேசிகர், திருமுறைப்பணி, திருவதிகை.
5. திரு V. சோமசுந்தர தேசிகர், ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருநாரையூர்
6. திரு. S. A. கோபாலன், வேய்ங்குழல், திருப்பனந்தாள்.
7. திரு. கோ. வேங்கடராமன், மிருதங்கம், திருப்பனந்தாள்.

Sri Kasi Mutt
Religious Charities,
Tirupanandal.

By Order of His Holiness
K. M. Venkataramiah, M. A.,
Manager.

குறிப்பு:- திருநாரையூரில் ஒரு ஓதுவார் நியமிக்கப்பெற்று நாடோறும் திருமுறைப் பாராயணம் நடைபெற்று வருகிறது.

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

# நம்பியாண்டார் நம்பிகள் வரலாறு

சைவத் திருமுறைகள் 12; சம்பந்தர்தேவாரம் 1-3; அப்பர் 4-6; சுந்தரர் 7; திருவாசகம் கோவையார் 8; திருவிசைப்பா திருப்பல்லாண்டு 9; திருமந்திரம் 10; திருவாலவாயுடையார் முதலாக நம்பியாண்டார் நம்பிகளோடு பன்னிருவர் பாடிய 40 நூல்கள் கொண்டது 11-ம் திருமுறை: பெரியபுராணம் 12-ஆம் திருமுறை. இவற்றுள் 1 முதல் 11 திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகள் ஆவர்.

இவர் திருநாரையூரில் சைவ மறையவர் குலத்தவர்; வடமொழி தென் மொழிகளில் வல்லவர்; சிறுவயதிலேயே தன் பக்திமையால் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரை நிவேதனத்தை உண்பித்தவர்; பொல்லாப்பிள்ளையாரிடம் சகலகலைகளையும் கற்றவர்: இராசராச சோழனின் விருப்பத்திற்கிணங்கப் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளால் சிதம்பரத்தில் பொன்மன்றின் அருகில் திருமுறை ஏடுகள் இருத்தலை அறிந்து திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுத்தவர்.

இவர்பாடிய நூல்கள் பத்து:- திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை; கோயில் திருப்பண்ணியர் விருத்தம்; திருத்தொண்டர் திருவந்தாதி; ஆளுடைய பிள்ளையார்-திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை; திருநாவுக்கரசர் திருஏகாதசமாலை.

இவர் திருநக்ஷத்திரம் வைகாசிப் புனர்பூசம் ஆகும்.

குறிப்பு:- 1 ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் அருளாணையின் வண்ணம் ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்திதம்பிரான் சுவாமிகள் அவர்களின் மாகேசுவரபூசைத் திருநாளில் 27-5-74உ திருச்செந்தூர், மதுரை, இராமேச்சுரம், காஞ்சிபுரம் வாரணசிஆகிய தலங்களில் அன்னம்பாலிப்பு நடைபெறும்

2 26-5-74உ சேக்கிழார் சுவாமிகள் நினைவு நாளில் குன்றத்தூரிலும். தஞ்சைமாவட்டம் திருநாகேச்சுவரத்திலும் நண்பகலில் அன்னம்பாலிப்பு நடைபெறும் (R. C.)

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

# மூன்றாம் திருமுறையின்

## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

68. திருக்கயிலாயம் பண்: சாதாரி

வானவரி கோளபுலி கீளதுரி
தாளின்மிசை நாளு மகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போளயில
கோளகளி றாளிவரவில்
தோளமரர் தாளமதர் கூளியெழ
மீளிமிளிர் தூளிவளர் பொன்
காளமுகில் மூளுமிருள் கீளவிரி
தாளகயி லாயமலையே.

பொழிப்பு: ஒளியுள்ள கோடுகளையுடைய கொல்லும் தன்மையதான புலியைக் கிழித்ததான தோலை தன் முயற்சியால் கிடைத்ததால் மேலே அணிதற்கு நாள்தோறும் மகிழ்கின்றவரும் உயிர்களை அடிமையாக ஆள்கின்றவரும் ஆன சிவபெருமான் விரும்புவதான இடம் யாதெனில், பிளக்கின்ற கூரிய கொம்புகளை உடைய கொல்லும் தன்மையதான யானையும் சிங்கமும் வருதலாலும் ஒளியுள்ள தோளுடைய தேவரும் செருக்குற்ற காலையுடைய பேயும் எழுந்து வருதலாலும் வன்மையான விளக்கமுற்ற ஆரவாரம் வளர்வதும் பொன்பொழியும் கருமேகம் போல மூண்டெழுந்த இருட்டுக் கெட்டோடும்படி விரிந்த அடிவாரத்தை உடையதும் ஆன திருக்கயிலாய மலையாகும்.

வாள்–ஒளி, கோள்-கொல்லும் தன்மை; கீள்தல்–கிழித்தல்; உரி-தோல்; வேள்-விருப்பம்; நகர்-இடம்; போள்தல்-பிளத்தல்; அயில்–கூர்மை; ஆளி-சிங்கம்; வில்–ஒளி; மதர்–செருக்கு; கூளி–பேய்; மீளி – வலிமை தூளி–ஆரவாரம் ; காளம்-கருமை; தாள்-அடிவாரம். தூளிவளர் கயிலாயம்; விரிதாளகயிலாயம் என இறையும் வேளநகர் யாதெனில் கயிலாயம் எனமுடிக்க. ஞானசம்பந்தர் திருக்காளத்தியில் இருந்து கொண்டு வடகயிலையைத் திசைநோக்கி வணங்கி இப்

பதிகத்தை அருளிச்செய்தார். இப்பதிகத்தைச் சிந்திப்பவர்க்கு வினைநைந்து ஒழியப் பரலோகம் எளிதாகக் கிட்டும்.

**69. திருக்காளத்தி** பண்: சாதாரி

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்தொரு மாகடல் விடம்
தானமுது செய்தருள் புரிந்த சிவன்
மேவுமலை தன்னை வினவில்
ஏனம்இள மானினொடு கிள்ளைதினை
கொள்ள எழிலார் கவணினால்
கானவர்தம் மாமகளிர் கனகமணி
விலகுகா ளத்தி மலையே.

பொழிப்பு: தேவர்களும் அசுரர்களும் துன்பப்படும்படி பெரிய கடலினின்று எழுந்து வந்த ஒப்பற்றவிடத்தைப் பிறர் உண்ணாமல் தான் மட்டுமே அமுது செய்து ஏனையோர்க்கு அருளைப் புரிந்த சிவபெருமான் தங்கும் மலையை யாதென்று கேட்பீராயின். அதுதான் பன்றிகளும் இளைய மான்களோடு கிளிகளும் தினைப்பயிரைக் கவரவேடுவர்களது அழகிய சிறந்த மகளிர் கவணால் எறியும் பொன்னும் மணியும் பன்றி முதலிய வற்றை விலகிச் செல்லுமாறு செய்கின்ற திருக்காளத்தி மலையாகும்.

தானவர்—அசுரர்; வாதை—துன்பம்; மேவுதல்—தங்குதல்; ஏனம்—பன்றி; கிள்ளை – கிளி; கானவர்—காட்டில் வாழும் வேடுவர்; கனகம்—பொன். மாகடல் வந்த தொருவிடம் எனவும் கானவர்தம் எழிலார் மாமகளிர் எனவும் மாறிக் கூட்டுக. ஞானசம்பந்தர் திருக்காளத்தி மலையில் தங்கியிருந்த போது அருளிச் செய்த பதிகங்களில் இதுவும் ஒன்று. இப்பதிகத்தை இசையோடு பாடவல்லவர்கள் நல்லவராவர்; மேலும் அவர்க்குப் பரலோகம் எளிதாகக் கிட்டும்.

**70 திருமாயிலாடுதுறை** பண்: சாதாரி

ஏனவொயி றுடரவொ டென்புவரி
யாமை இவை பூண்டிளை ஞராய்க்
கானவரி நீடுழுவை அதனுடைய
படர்சடையர் காணி எனலாம்

ஆனபுகழ் வேதியர்கள் ஆகுதியின்
மீதுபுகை போகி அழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட
மூசுமயி லாடுதுறையே.

பொழிப்புரை: புகழ் சேர்ந்த அந்தணர்களின் யாக குண்டங்களின் புகை மேலே சென்று, அழகிய வானளாவிய சோலையின் மேல் மேகமாகத் தோன்ற (அதைக் கண்டுகளிப் புற்ற) கூட்டமாக வந்த மயில்கள் ஆடுகின்ற துறையை (அதாவது திருமயிலாடுதுறை என்ற தலத்தைப்), பன்றிக் கொம்பும் ஆடு பாம்பும் ஆகியவற்றோடு எலும்பையும் வரி யுள்ள ஆமைஓடும் ஆகியவற்றையும் அணிந்து கொண்டு இளைஞரான தோற்றமுடையவராய்க், காட்டில் வாழும் நீண்ட சிறுத்தையின்தோலை உடையாகக் கொண்ட படர்ந்த சடையையுடைய சிவபெருமானுக்குச் சொந்த இடம் என்று கூறலாம்.

ஏனம்-பன்றி; எயிறு-கொம்பு; உழுவை-சிறுத்தைப்புலி அதள்-தோள்; காணி-சொந்த இடம்; மாசு-மேகம்; மூசு-மொய்க்கின்ற (கூட்டமான); ஆகுதியின் புகைமீது போகி எனமாறிக் கூட்டுக. மயிலாடுதுறையைச் சடையர் காணி எனலாம் எனமுடிக்க. ஞானசம்பந்தர் மயிலாடுதுறை இறைவனை வணங்கிப் புறத்தனையும் போது இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தை இசையோடு பாடுபவர் பொன்னுலகம் பெறுவர்.

(தொடரும்)

உ
சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுகள்

| | | | ரூ. பை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) | ... | 2 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் | ... | 0 40 |
| 3 | ,, சிதம்பர மும்மணிக்கோவை ,, | ... | 0 20 |
| 4 | ,, மதுரைக்கலம்பகம் ,, | ... | 0 40 |
| 5 | ,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, | ... | 0 50 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் | ... | 2 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | ... | 1 25 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் | ... | 0 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை | ... | 1 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை | ... | 1 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் | ... | 0 50 |
| 12 | ,, மூலம் | ... | 0 10 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் | ... | 0 15 |
| 14 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் | ... | 0 10 |
| 15 | கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) | ... | 0 05 |
| 16 | அபிராமியந்தாதி மூலம் | ... | 0 15 |
| 17 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) | ... | 4 25 |
| 18 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) | ... | 2 75 |
| 19 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) | ... | 1 75 |
| 20 | திருவாசகம் (மூலம்) | ... | 0 75 |
| 21 | திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) | ... | 3 50 |
| 22 | 9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் | ... | 0 56 |
| 23 | ,, ,, தெளிவுரை | ... | 1 50 |
| 24 | திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு | ... | 2 50 |
| 25 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) | — | 2 50 |
| 26 | பேராயிரப் பனுவல்கள் | ... | 0 10 |
| 27 | திருத்தொண்டர் புராணசாரம் | ... | 0 40 |
| 28 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி | ... | 0 25 |
| 29 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் | ... | 0 50 |
| 30 | திருக்கயிலைத் திருமுறை | ... | 0 37 |
| 31 | பழமொழித் திருமுறை | ... | 0 |
| 32 | அப்பர்விழா வெளியீடு | ... | |
| 33 | Hymns and Proverbs | ... | |
| 34 | திருவாரூர்-திருப்பனுவல்கள் | — | |

**Registered With the Registrar of Newspapers for India**
**Under No. R. No. 1485/57.**

**Regd No. M. 5574** குமரகுருபரன்

| | | | |
|---|---|---|---|
| 35 | குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும் | 0 | 30 |
| 36 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) | 1 | 75 |
| 37 | திருவாசகம் தேனும் கனியும் | 0 | 15 |
| 38 | தேவாரம் பாடும்பயன் | 0 | 15 |
| 39 | காசிக்கலம்பகம் உரை நடை | 0 | 15 |
| 40 | தாழைத் திருமுறை | 0 | 15 |
| 41 | ஐந்து நீதி நூல்கள் | 0 | 10 |
| 42 | நவக்கிரகமாண்பு | 0 | 25 |
| 43 | ஸ்ரீ சைலம் | 0 | 10 |
| 44 | திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் | 0 | 37 |
| 45 | திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி | 0 | 10 |
| 46 | செந்திலாண்டவன் மகிமை | 0 | 15 |
| 47 | திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு) | 2 | 00 |
| 48 | திருமுருகாற்றுப்படை | 0 | 15 |
| 49 | தேவார வைப்புத்தல விளக்கம் | 0 | 15 |
| 50 | திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) | 2 | 00 |
| 51 | திருக்குறள் மூலம் | 0 | 25 |
| 52 | திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை | 0 | 20 |
| 53 | திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் | 0 | 13 |
| 54 | முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) | 0 | 60 |
| 55 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் | 1 | 50 |
| 56 | திருக்குறள்-பொருட்பால் ,, | 2 | 50 |
| 57 | திருக்குறள்-காமத்துப்பால் ,, | 1 | 00 |
| | ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும் | 4 | 00 |
| 58 | கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் | 1 | 25 |
| 59 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் | 1 | 00 |
| 60 | சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் | 3 | 00 |
| 61 | அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) | 0 | 50 |
| 62 | மங்கலம் | 0 | 20 |
| 63 | திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் | 0 | 20 |
| 64 | கோதனத் திருமுறை | 0 | 10 |
| 65 | தோடுடைய செவியன் கோவண ஆடையன் | 0 | 15 |
| 66 | பண்டார மும்மணிக்கோவை உரை நடை | 0 | 15 |
| 67 | மகேசுவரபூசை | 0 | 15 |
| 68 | கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர் | 0 | 10 |
| 69 | திருவிசைப்பா தேனும் கனியும் | 0 | 10 |

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**

**''தியாகராஜ விலாசம்''** 53. பிள்ளையார் கோவில் தெரு,

திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-600005

சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 628601 -74